www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 ஜூலை '88

3 - 14

விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com




**எம்.ஜி.ஆர்.** அரசால், பல முறை ஒத்திப் போடப்பட்ட கூட்டுறவு தேர்தல் இந்த முறை கண்டிப்பாக நடக்கலாம்! நடக்கும். நடக்க வேண்டும் — இப்படித்தான் எல்லா ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும், உள்ளூர் ஆதிக்க சக்திகளும் நாக்கில் எச்சில் ஊறக் காத்திருக்கின்றன.

'கவர்னர் ஆட்சி கூட்டுறவு தேர்தலை நடத்துவது ஜனநாயகத்துக்கே விரோதமானது' என காட்டுக் கூச்சல் போட்ட கருணாநிதி தேர்தல் நடக்கும் என்பது உறுதியானவுடன் உடன்பிறப்புக்களிடம் தோப்புக்கரணம் போடுகிறார், வெற்றிக்கனியை பறித்து தரச் சொல்லி.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் வாழைத் தோட்டத்தில் புகுந்த வானரங்களாக அனைத்து ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும் வரிந்துக் கட்டிக் கொண்டு பங்குக்கு அலைகின்றன. அவசர அவசரமாக எல்லா ஓட்டுக் கட்சிகளும் நூற்றுக்கணக்கான பினாமிகளை உறுப்பினர்களாக சேர்க்கின்றன, எப்படியும் வெற்றி பெற்று தீர வேண்டுமென.

காந்தி, நேரு கனவு கண்ட சோசலிச இந்தியாவிற்கு முன்னுதாரணமாக இருப்பது கூட்டுறவுகள்தான். பாமர மக்கள் பங்குதாரர்களாவதும் அவர்களே நிர்வாகிகளாக இருப்பதும் தான் கூட்டுறவின் தனிச்சிறப்பான குணாம்சம் என்கிறார்கள்.

ஆனால், உழைக்கும் மக்களுக்கோ பழகிப்போன நிதர்சனமான உண்மையாக தெரிவது இதற்கு நேர்மாறாக இருக்கிறது. ஓட்டு பொறுக்கிகளின், உள்ளூர் ஆதிக்க சக்திகளின், அதிகார வர்க்கத்தின் கூட்டுக் கொள்ளைக்கான திறந்த வெளி அரங்கமாக இருப்பது தான் கூட்டுறவாக இருக்கிறது.

உரத் தொழிற்சாலை நூற்பு ஆலை, சர்க்கரை ஆலை, தொடங்கி மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர சிறுபோக்குவரத்து கூட்டுறவு சங்கங்கள், கிராமக் கைத்தொழில் சங்கங்கள், விவசாயி, தொழிலாளர், அரசு அலுவலர்கள் கூட்டுறவு சங்கங்கள் என தமிழகத்தில் மொத்தம் 49 துறைகளில், சிறியதும் பெரியதுமாக மொத்தம் 30,000 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக, ஏன், அதற்கும் மேலான பரந்து விரிந்த திறந்த வெளி கூட்டுக் கொள்ளைக்கான அரங்கம் இது. உதாரணமாக; சங்கங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவது, அதை உறுப்பினர்களுக்கு வழங்குவது, தயாரித்த பொருட்களை வெளியில் விற்பது வரை ஒவ்வொரு கட்டங்களிலும் கமிஷன் அடிக்கவும், பினாமிகளிடமே தேவையான பொருட்களை வாங்குவதும் விற்பதும், அனைத்து வேலைக்கான ஒப்பந்தங்களை ஒப்படைக்கவும், பினாமிகள் பெயரில் பெருந்தொகைகளை கடன்களாக சுருட்டவும் வசதி மிக்க இடமாக இருப்பதுதான் கூட்டுறவு. இவை இல்லாமல் சில்லறை திருட்டுகள் நடத்தவும் ஏற்ற இடம் இது. சங்க வேலைகளை காரணம் காட்டி ஊர்ச் சுற்றவும், இயக்குனர்கள் கூட்டம் என 'ஊரான்' பணத்தில் உல்லாசமாக பொழுதைக் கழிக்கவும், அரசாங்கத்தின் மான்யங்களை பினாமிகள் பெயர்களில் அனுபவிக்கவும், உறவினர்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலை போட்டு தரவும் இப்படி கணக்கிலடங்காத சில்லறை வரவுகள் ஏராளமாக கிடைக்கும் இடம் இது. தங்கச் சுரங்கத்திற்கு ஒப்பான கூட்டுறவு நிறுவனங்களை பிடிப்பதன் மூலம், பெரும் பணத்தையும் உள்ளூர் ஆதிக்கத்தையும் வெகு விரைவில் அடைய முடியும்.

அதிகார வர்க்கத்துடன் சேர்ந்துக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதகள் விரும்பினால் இப்படி கூட்டுக் கொள்ளை அடிக்கலாம். மற்றபடி மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒரு துரும்பை நகர்த்தும் அதிகாரம் கூட கிடையாது.

விவசாயிகள், நெசவாளர்கள், கிராமத் தொழிலாளர்கள், கூட்டுறவு சங்கத்திற்கோ அல்லது, பெரும் மத்திய கூட்டுறவு சங்கங்களுக்கோ இயக்குனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டால், அச்சங்கங்கள் விற்கும் பொருட்களுக்கோ, அல்லது உறுப்பினர்களுக்கு வழங்கும் கடன்களின் வட்டி விகிதத்தை தீர்மானிப்பதிலோ இவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவ்வளவு ஏன்? அரசு எந்திரத்தால் கூட்டுறவு சங்கங்களில் திணிக்கபடும் தேவையற்ற சுமையான அதிகாரவர்க்க கூட்டத்தைக் கூட இவர்களால் தடுத்து நிறுத்த முடியாது. அதிகாரவர்க்கத்திற்கு வெறுமனே தலையாட்டும் பொம்மைகளாகத் தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு எந்த அதிகாரமுமில்லாத இந்த போலிக் கூட்டுறவு நிறுவனங்களைத் தான் சோசலிசத்தின் பூங்காவென வெட்கமில்லாமல் பிரச்சாரம் செய்கிறார்கள், ஓட்டு பொறுக்கிகள்.

மக்களுக்கு வேண்டாத சுமையான, தரகு அதிகாரவர்க்க, நிலப்பிரபுக்களின் அரசு எந்திரத்தையும், அதன் அதிகார வர்க்கத்தையும் ஒழித்துக் கட்டும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தவறு செய்தால் திருப்பி அழைக்கும் அதிகாரத்தை மக்கள் கரங்களில் குவிக்கும், ஒரு புதிய ஜனநாயக அரசில் தான், கூட்டுறவு அமைப்புகள், அதன் உண்மையான அர்த்தத்தில் இயங்கும்.

எனவே, போலியான கூட்டுறவு நிறுவனங்களை அதற்கான தேர்தல்களை முற்றாக புறக்கணிப்போம்! உண்மையான கூட்டுறவு, அதற்கான நிறுவனங்களை படைக்க புதிய ஜனநாயக அரசமைக்கப் போராடுவோம்!

வதிலை காளிதாசன்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

14

1-15 ஜுன் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# பினாமி ஒழிப்புச் சட்டம்! இன்னுமொரு பித்தலாட்டம்!

கிராமப்புற, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டங்களிலிருந்து நிலப் பிரபுக்களையும், முதலாளிகளையும் காப்பதற்குக் கண்டுபிடிக்கப்பட்டது பினாமி முறை. ஏக போகத் தடுப்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு பெரும் தரகு அதிகார முதலாளிகள் பின்பற்றியது பினாமி முறை. வரி ஏய்ப்பு செய்வதற்காக முதலாளிகள் வகுத்துக் கொண்டது பினாமி முறை. அதாவது தனக்கு மிகவும் விசுவாசமான அல்லது நெருங்கிய நபர்கள் மீது சொத்துக்களை எழுதி வைத்து விடுவதன் மூலம் இந்தச் சட்டங்களினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர். உச்சவரம்புச் சட்டங்கள் வந்தபோது இவர்கள் இன்னும் கீழ்த்தரமானவர்களாய் இழிந்து போய் ஆடு, மாடு, நாய்கள் மீதுகூட சொத்துக்களை எழுதிவைத்தனர். ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்கள் அதிகாரமுறை கேடுகளினால் இரகசியமாகச் சொத்துக்களைச் சேர்த்து வைப்பதற்கும் பயன்படுத்தியது இந்த பினாமி முறை.

இவ்வளவு கேடான, 'நாட்டின் முற்போக்குச் சட்டங்களை'க் கேலி செய்யக் கூடிய பினாமி முறையை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு, கடந்த மாதம் அரசுத் தலைவர் ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார். ''பினாமி பரிமாற்றங்கள் (சொத்துக்களை மறு கையகப்படுத்துவதைத் தடுக்கும்) அவசரச் சட்டம், 1988'' என்று அதற்குப் பெயர். அதன்படி யாராவது பினாமி பெயருக்கு சொத்துக்களை மாற்றினால் அவை பினாமிக்கே சொந்தமாகிவிடும். அதாவது பினாமிகளே சட்டப்படியான உடமையாளராகி விடுவார்கள். பினாமிதாரரிடமிருந்து பழைய, உண்மையான உடமையாளர்கள் மீண்டும் சொத்துக்களைக் கையகப்படுத்தும் உரிமை கிடையாது.

அவசரச் சட்டம் பிறப்பித்திருப்பதையும், அதுபற்றி பாசிச ராஜீவ் கும்பல் அடிக்கும் முற்போக்கு சவடால்களையும் மட்டுமே பார்ப்பவர்கள் ஏமாந்து போவார்கள். சம்பந்தப்பட்ட விவகாரங்களை நெருங்கிப் போய் அலசுபவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். பரம்பரை ஆட்சியாளர்களான நேரு, இந்திரா, ராஜீவ் குடும்பத்தினர் செய்யும் இன்னுமொரு சோசலிசப் பித்தலாட்டம்தான் இந்த பினாமி ஒழிப்புச் சட்டம்.

பினாமிதாரர் 'நம்பிக்கைத் துரோகம்' செய்துவிடும்போதுதான், உடமையாளர் சொத்துக்கு உரிமை கோரி சட்ட நடவடிக்கை எடுக்கும்போது தான் பினாமிமுறை ஒரு விவகாரம் ஆகிவிடுகிறது. பினாமிதாரர் மீது வழக்குத் தொடுத்து சொத்துக்களை உடமையாளர் மீண்டும் கையகப்படுத்தும் உரிமை முன்பு இருந்தது. இப்போது அந்த உரிமை சட்டப்படி கிடையாது. இதனால் பினாமி முறை ஒழிந்து விடாது. இனிமேல் எச்சரிக்கையோடு மிகவும் விசுவாசமான, மிகவும் நெருங்கிய உறவினரான பினாமிகளைத் தேடிக் கொள்ள வேண்டும். மேலும் ஏற்கனவே உள்ள ஏற்பாட்டின்படி பினாமிதாரரிடமிருந்து சொத்துக்கு சமமான மதிப்புடைய 'புரோ நோட்டு' - கடன்பத்திரம் எழுதி வாங்கிவிட முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இம்மாதிரியான சட்டங்களை அமுல்படுத்தும் அதிகார வர்க்கமும், பணபலமும் ஆள்பலமும்தான் இறுதியாக எதையும் தீர்மானம் செய்கிறது. கிராமப்புறங்களைப் பொறுத்த வரை பினாமிதாரர்களை வைத்துக் கொள்ளும் பெரும் நிலப்பிரபுக்களை அவர்கள் ஒருபோதும் எதிர்க்கத் துணிய முடியாது. அவ்வாறு எதிர்த்த பினாமிச் சொத்துக்களை அவர்களே உடமையாக்கிக் கொள்ள முயன்றால் நிலப்பிரபுக்கள் தமது குண்டர் படையையும் அரசுப் படையையும் ஏவி அவர்களுடன் கணக்குத் தீர்த்துக் கொள்வார்கள்.

நகர்ப்புறங்களில்கூட, மாஃபியா குண்டர் படைகள் வலுவாகிவரும் இந்தக் காலத்தில் சொத்துக்களை உடமையாக்கிக் கொள்ள பினாமிதாரர்கள் துணிய முடியாது. அதிகாரவர்க்கமும் அரசுப் படையும் பெரும் பணக்காரர்களின் பக்கமே நிற்கின்றன. மேலும் நகரங்களில் தனிப்பட்ட பினாமிகளை விட ''டிரஸ்ட்''-அறக்கட்டளைகள், சொத்துக்களைக் குவித்து வைப்பதற்கான முக்கிய முறையாக இருக்கிறது. ஏகபோக தரகு அதிகார வர்க்க முதலாளியான பலரும் பினாமி சொத்துக்களை அறக்கட்டளைகள்மூலம் குவித்துள்ளனர்.

தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் பினாமி ஒழிப்புச் சட்டமும்கூட பெரு நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளுக்கு வசதியான முறையில் இரண்டு விதிவிலக்குகள் அளித்துள்ளது. பிளவுபடாத இந்து குடும்பத்தின் பங்காளிகள் பெயரில் பினாமி சொத்துக்கள் வைத்துக் கொள்வதற்கு ஒரு விதிவிலக்கு! அறக்கட்டளையின் தர்ம கர்த்தா அல்லது வேறு ஒரு நபரின் நலன்களுக்கான பொறுப்பாளர் என்கிற முறையில் பினாமிச் சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கு மற்றுமொரு விலக்கு - ஆகியன அளிக்கப்பட்டுள்ளன.

ஆகவே தற்போது கொண்டு வந்திருக்கும் பினாமி ஒழிப்புச் சட்டம் பாசிச ராஜீவ் கும்பல் எதிர்கொண்டுள்ள ஆயுதபேர ஊழல் உட்பட பல அரசியல் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு செய்யும் மற்றொரு பித்தலாட்டமாகும். நிலப் பிரபுக்கள், தரகு அதிகார முதலாளிகள், கருப்புப் பணம், கள்ளச் சந்தை, கடத்தல், கள்ள நோட்டு முதலிய சமூக விரோதிகள், ஏகாதிபத்திய கம்பெனிகள் போன்றவற்றின் மக்கள் விரோத, தேச விரோத சொத்துக்கள் அனைத்தும் நட்ட ஈடு இன்றிப் பறிமுதல் செய்து மக்களிடையே மறுபங்கீடு செய்வதுதான் சமூக நீதியாக இருக்கமுடியுமே தவிர, இதுமாதிரியான கண்துடைப்பு வேலைகள் பயன்தராது. புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் அதிகாரத்தை வென்றெடுக்கும் புரட்சிகர மக்கள் கமிட்டிகள்தான் அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து மறுபங்கீடு செய்யுமே தவிர, தற்போதுள்ள ஓட்டுக் கட்சி அரசாங்கங்களும், அரசும் அதைச் சாதிக்காது!

படிப்பகம்

www.padippakam.com

# சீருடை தரித்த வெறிநாய்கள்!


வெறிநாய்களுக்குள் இன வேறுபாடு கிடையாது. அது ராஜபாளையம் நாயாக இருந்தாலும் சரி, கோம்பை நாயாக இருந்தாலும் சரி, பங்களாவில் வளரும் வீரிய ஒட்டு ரக மேல்சாதி நாயாக இருந்தாலும் சரி; வெறிபிடித்துவிட்டால் எல்லாம் ஒரே மாதிரி தான். மனிதர்கள் மீது பாய்ந்து கடித்துக் குதறும்.

போலீஸ் வெறிநாய்களும் அப்படித்தான்!

போலீஸ் வெறிநாய்களின் அக்கிரமங்களை ஒன்று விடாமல் தினசரி வெளியிடுவது என்று நாளேடுகள் முடிவு செய்யுமானால் அவை எத்தனை பக்கங்கள் ஆனாலும் அடங்காது. அனால் முதலாளித்துவ நாளேடுகள் அப்படிச் செய்யமாட்டா. அப்புறம் அவர்கள் மீதும் போலீஸ் வெறிநாய்கள் பாய்ந்து கடித்துக் குதறிவிடும். இருப்பினும் போலீஸ் வெறிநாய்களின் அக்கிரமங்கள் பற்றிய செய்திகள் அன்றாடம் கசிந்து வெளியே வந்து விடுகின்றன. சமீபத்தில் அசாம் கிராமத்திலும், பீகார் கிராமத்திலும் போலீஸ் காம வெறியர்கள் புகுந்து பெண்களைக் கற்பழித்த செய்திகள் அப்படி வந்தவை தாம். இந்த மாதம் இன்னும் இரண்டு செய்திகளை எடுத்துக் காட்டாகத் தருகிறோம்.

''நாங்கள் வந்தால் போலீசார் நல்லவர்ளாகி விடுவார்கள்; நடுநிலை வகிப்பார்கள்'' என்று சொல்லி ஆட்சிக்கு வந்து ''மார்க்சிய கம்யூனிஸ்டுகள்'' ஆளும், அதுவும், அதன் முதல்வர் நாயனார் போலீஸ் மந்திரியாக உள்ள மாநிலம், கேரளா. கொத்தமங்களம் என்ற சிறு நகருக்கு அருகே உள்ளது மந்திராபிளி என்கிற கிராமம். மே தினத்தன்று அவ்வூரில் உள்ள தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் குட்டியைத் தேடி ஒரு போலீஸ்காரன் வந்தான். ''ஐயா கூப்பிடுகிறார், ஸ்டேசன் வரை வந்து விட்டுப்போ! என்று கிருஷ்ணன் குட்டியைக் கூட்டிப் போனான். இப்படித் தான் போலீஸ் வெறிநாய்கள் தமது இரையைப் பிடிக்கின்றன என்பதை நாம் அறிவோம்!

கொத்த மங்களம் போலீஸ் நிலையத்துக்குப் போன கிருஷ்ணன் குட்டியை ஒரு தங்கச் சங்கிலி திருட்டை ஒப்புக் கொள்ளும்படி அதிகாரி நிர்பந்தித்தான். தனக்கு ஒன்றும் தெரியாது என்று மன்றாடிய கிருஷ்ணன் குட்டியை அடிவயிற்றுக்குக் கீழே எத்தினான் அதிகாரி. சுருண்டு விழுந்தார் கிருஷ்ணன் குட்டி. பிறகு சித்திரவதை தொடங்கியது. கீழே படுக்க வைத்து தொடையிலும் கால்களிலும் ''ரூல்'' தடியை உருட்டினார்கள், போலீஸ் வெறிநாய்கள். வெளியே இழுத்துப் போய் மலத்தை அள்ளி வந்து வாயிலே திணித்து தின்ன வைத்தனர். தாகத்தால் கிருஷ்ணன் குட்டி தவித்த போது ஒரு போலீஸ் வெறிநாய் சிறு நீரடித்தது. செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி 15 நாட்கள் இப்படி சித்திரவதை நடந்தது.



கிருஷ்ணன் குட்டியின் பெற்றோர்கள் முதல் மந்திரிக்கு மனுப் போட்ட பிறகு, கொத்தமங்கலம் வட்ட மருத்துவ மனைக்கு அவர் அனுப்பப் பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் போகவே கோட்டயம் மாவட்ட மருத்துவ மனைக்கு அனுப்பப் பட்டார். இன்னமும் கிருஷ்ணன் குட்டி அவதிப் படுகிறார்; தொடர்ந்தாற் போல் பேச முடியவில்லை. வலி தாளாமல் மயங்கி விடுகிறார். அவர் கொடுத்த புகாரின் பேரில் கோட்டயத்தில் ஒரு வழக்கு மதி வாகியுள்ளது.

இத்தனைக்கும், கிருஷ்ணன் குட்டி, ஆளும் கட்சியின் தலைமையிலுள்ள ஜனநாயக வாலிபர் சங்க உறுப்பினர் கட்சியிடமும் சங்கத்திடமும் அவர் முறையிட்டார். ''விஷயம் வெளியே வந்தால் நமது கட்சியின் பெயர் கெட்டு விடும், நமது முதலமைச்சர்தான் போலீஸ் மந்திரியாக உள்ளார்'' என்று கூறி மூடி மறைத்து விடுவதிலேயே அவர்கள் அக்கறையாய் இருந்தார்கள். மருத்துவ வசதி கூட செய்துதர மறுத்து விட்டார்கள். காங்கிரசின் கருணாகரன் ஆட்சியிலே நடந்த ராஜன் சித்திரவதை-கொலை; அப்பப்பாரா மலைவாழ் பெண்களை நிர்வாணமாக்கி நடனமாட வைத்து கற்பழித்தது; தங்கமணி கிராம மக்களைக் கற்பழித்தது ஆகிய போலீஸ் வெறிநாய்களின் அக்கிரமங்களைப் பிரச்சாரம் செய்தே ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டுகள், அந்த வழக்குகளைக் கிடப்பில் போட்டனர். இப்போது கிருஷ்ணன் குட்டி சித்திரவதை போன்ற சம்பவங்களை மூடி மறைக்கின்றனர்.

## போலீஸ் நிலையச் சித்திரவதை

கொலைகள், கற்பழிப்புகள் மற்றும் குற்றவாளிகளுடன் ஆயுத மோதல் என்கிற பெயரில் கொலைகள் ஆகியவற்றில் நாட்டிலேயே முதலிடம் வகிப்பது மத்தியப் பிரதேச வெறிநாய்கள். நடக்காத கொலையைச் செய்ததாக இரண்டு பேரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் வாங்குவதில் இப்போது சாதனை நிகழ்த்தியுள்ளார்கள்.

ம.பி, ஹோஷங்கா மாவட்டத்திலுள்ள பிப்பாரியா போலீஸ் நிலையத் தலைமை போலீஸ்காரன் வினய் துபே. அங்கிருந்து 6 கி.மீ. தூரத்திலுள்ள பூதானி கிராமத்தின் அசோக் தீக்சித், அவனது சகோதரன் பூல்சந்த் ஆகிய இருவருக்கும் உணவுக் கலப்பட வழக்கு சம்பந்தமாக சம்மன் கொடுக்கப் போனான். குடிவெறியில் இருந்த தலைமை போலீசுக்காரனுக்கும் அசோக், பூல்சந்த் உட்பட கிராம இளைஞர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. போலீஸ்காரனை இளைஞர்கள் செமத்தியாக உதைக்கவே அவன் சைக்கிளையும் குறுந்தடியையும் எறிந்து விட்டு ஓடிவிட்டான்.

அடுத்த ஆறுநாட்கள அவன் போலீஸ் நிலையத்திற்குத் திரும்பாமற் போகவே பூதானி கிராமத்திலிருந்து 11

படிப்பகம்

www.padippakam.com



70 வயது ராமாபாய். அவரை நிர்வாணமாக்கி மறைவிடத்தில் மிளகாய்ப் பொடியைத் திணித்து சித்திரவதை செய்தார்கள். 10 வயது சிறுவன் நரேஷ். அவனது கை விரல் நகத்தைக் குறடால் பிடுங்கினர். 50 வயதான சுக்தேவ் யாதவ். அழுகிய பிணத்தின் காலை மூக்கிலே வைத்து முகர்ந்து பார்க்கச் செய்தனர். போலீஸ் வெறிநாய்களின் இந்த அக்கிரமங்களுக்குக் காரணம் ஒரு தலைமைப் போலீஸ்காரனை அந்தக் கிராமத்தினர் கொன்று விட்டதாக முடிவு செய்ததுதான்! இத்தனை அட்டூழியங்களையும் நடத்தி இந்த அப்பாவிகளிடம் கொலை செய்ததாக வாக்குமூலம் பெற்ற அடுத்தநாள் கொலையானதாகக் கருதப்பட்ட போலீஸ்காரன் உயிருடன் திரும்பி வந்தான்.

குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 50 பேரைப் போலீசார் இழுத்து வந்து கொட்டடியில் அடைத்தனர். தொடர்ந்து ஐந்து நாட்கள் பட்டினி பேட்டு குறுந்தடியினாலும் பிரம்பாலும் தாக்கினர். நகக் கண்களில் ஊசி ஏற்றி சித்திரவதை செய்தனர். ''தலைமைப் போலீஸ்காரனை என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டுத் துன்புறுத்தினர்.

அடுத்த நாள் ஆற்றங்கரையில் ஒரு ஆணின் துண்டான காலைக் காணவே, அது காணாமல் போன போலீஸ்காரானுடையது என்றும் அவனைக் கிராமத்தார் கொன்று விட்டதாகவும் முடிவு செய்தனர். இறுதியில் நடந்த தடயப் பரிசோதனையில் அந்தக் கால் மூன்று மாதப் பிணத்தினுடையது; ஆறடி உயரமுடைய மனிதனுடையது என்று தெரிந்தது. ஆனால் காணாமல் போன போலீஸ்காரனோ மிகவும் குள்ளமானவன்.

பிணத்தின் காலைக் கண்டதும் போலீஸ் நாய்களுக்கு வெறிபிடித்தது. பூதானி கிராமத்து மக்கள் மீது, குறிப்பாக அசோக், பூல்சந்த் குடும்பத்தினர் மீது மூர்க்கமாகப் பாய்ந்தன. அவர்களுடைய 70 வயதுத் தாயை இழுத்து வந்து, நிர்வாணப்படுத்தி, மறைவிடத்தில் மிளகாய் பொடியைத் திணித்து சித்திரவதை செய்தனர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவனை இழுத்து வந்து ஒரு குறடினால் அவனது நகத்தைப் பிடுங்கினர். அந்தச் சிறுவன் கதறுவதை அவனுடைய தாய் கேட்கும்படி செய்தனர். 20 வயது இளம் பெண்ணையும் இழுத்துப் போய் சித்திரவதை செய்தனர். எவ்வளவு கொடூரமான, வக்கிரமான மனித மிருகங்கள் இந்தப் போலீசு வெறி நாய்கள்!

ஐந்து நாட்கள் தொடர்ந்து நடந்த சித்திரவதை தாங்காமல் தலைமைப் போலீஸ்காரனை தாமே கொலை செய்ததாக அந்தச் சகோதரர்கள் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார்கள். பூதானி கிராமத்துக் காரர் 50 வயது சுக்தேவ் துபே. அவரை மூன்று நாட்கள் பட்டினி போட்டு, சித்திரவதை செய்து, பிணத்தின் அழுகிய காலை முகர்ந்து பார்க்கும் படி செய்து துன்புறுத்தினார்கள். எதற்கு? கொலையை நேரில் கண்டதாக சாட்சி கூறும்படி செய்வதற்கு வேறு வழயின்றி அவரும் ஒப்புக் கொண்ட பிறகே விடுவித்தனர்.

இவ்வளவுக்கும் பிறகு மாநிலத் தலைமைப் போலீஸ் அதிகாரி அருண் குப்தா பத்திரிக்கையாளர்களைக் கூட்டி வெற்றிக் குதூகலத்தோடு அறிவித்தார், ''புதிர் தீர்ந்தது; இரண்டு கொலைகாரர்களைப் பிடித்து விட்டோம்'' என்று. ஆனால் அடுத்த நாள் யாரைக் கொலை செய்யப்பட்டதாக கருதி இத்தனை அக்கிரமங்களும் நடந்ததோ அந்த தலைமைப் போலீஸ்காரன் வினய்துபே இட்டார்சி நகரிலுள்ள தனது மைத்துனன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அப்போதும் விடவில்லை போலீஸ் வெறிநாய்கள். கொலை வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்ட போதும், தலைமைப் போலீஸ்காரனை அடைத்து வைத்துத் தாக்கியதாக வழக்குப் போட்டு அசோக், பூல்சந்த் ஆகியோரோடு அவர்களின் இன்னொரு உறவுக்காரரையும் சிறையிலடைத்தனர். விவகாரம் வெளி உலகுக்குத் தெரிந்து எதிர்க் கட்சிகள் சட்டசபையில் கூச்சல் போட்ட பிறகு அதிகார பூர்வ விசாரணைக்கு அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்திலும், கேரளத்திலும் நடந்த இரு சம்பவங்களும் போலீஸ் வெறி நாய்கள் நாடு முழுவதும் நாள்தோறும் நடத்தும் அக்கிரமங்களின் இரு உதாரணங்கள் தாம். எலும்புகளை முறிப்பது, இரும்பைக் காய்ச்சி கண்களில் சொருகுவது, ஆணின் விரைகளை நசுக்குவது, பெண்களைக் கற்பழிப்பது, நேரடியாகப் படுகொலை செய்வது முதலானவை போலீஸ் வெறிநாய்களைப் பொருத்தவரை சர்வ சாதாரண நிகழ்ச்சிகள். இந்த மாதிரியான போலீஸ் சித்திரவதைகள், போலீஸ் கிரிமினல் குற்றங்கள், போலீஸ் மிருகத் தனங்களில் ஒன்றுக்குக்கூட அந்த வெறிநாய்கள் தண்டிக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவர்கள் தமது சகபாடிகளாலும் அரசாலும் பாதுகாக்கப்படுகிறார்கள்.

ஓட்டுக்கட்சி அரசாங்கங்கள் எதுவும் போலீஸ் வெறிநாய்களின் கிரிமினல் குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிக்காது. மேல் முறையீடு - புகார் செய்யப்பட வேண்டிய சட்ட நீதி நிறுவனங்கள் அனைத்தும் அந்தக் கயவர்களைக் காக்கவும், தடயங்களை அழிக்கவும், பொய்சாட்சிகளை உருவாக்கவும் உதவுகின்றன. ஓட்டுக்கட்சி அரசியல் வாதிகள், போலீஸ், 'நீதிபதிகள்' அதிகார வர்க்கத்தினர் ஆகிய அனைவரும் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ளனர். ஒருவருக்கொருவர் உதவி செய்து குற்றங்கள் புரிந்து தப்பித்துக் கொள்கின்றனர்.

டெல்லி வக்கீல் ஒருவரை கை விலங்கிட்டு கோர்ட்டுக்கு இழுத்து வந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்த பிற வக்கீல்கள் மீது தடியடி நடத்தியும், அதற்கு எதிராக நீதிகோரி வேலை நிறுத்தம் செய்த வக்கீல்கள் மீது காங்கிரசு குண்டர்களை ஏவித் தாக்கியும் அவர்களுடைய வாகனங்களை நொறுக்கியும் அட்டூழியம் செய்தது டெல்லி போலீஸ். வக்கீல்களின் காலவரையற்ற வேலை நிறுத்தம் காரணமாக இரு நீதிபதிகளைக் கொண்ட விசாரணை நடக்கிறது. ஆனால் போலீசே சாட்சி சொல்ல மறுத்தும், எதிர்வழக்குப் போட்டும் விசாரணையை நிலைகுலைய வைக்கிறது. டெல்லி அரசும் இதற்கு உடந்தையாய் இருக்கிறது.

பாக்பாட் நகரில் மாயாதியாகியின் கணவனையும் அவரது சகோதரனையும் பட்டப்பகலில் கடைவீதியில் வைத்து சுட்டுக் கொன்று விட்டு, கர்ப்பிணியான மாயாதியாகியை நிர்வாணமாக்கி தெருத்தெருவாய் இழுத்தப் போய், அவரது மறைவிடத்தில் குறுந்தடியைச் சொருகியும் பல போலீஸ் வெறி நாய்கள் கற்பழித்தும் மிருகத்தனமாக நடந்து கொண்டனர். ஆறு போலீஸ்காரர்களுக்கு கீழ்க் கோர்ட் மரணதண்டனை விதித்தது. அது கடுமையான தண்டனை என்று கூறி மேல்முறையீடு செய்துள்ளது அரசு. அந்த அக்கிரமத்துக்குக் காரணமான அதிகாரி மீது வழக்கே போடப்படவில்லை. அவன் மற்றொரு கற்பழிப்பு வழக்கில் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளான்.

இம் மாதிரியான போலீஸ் வெறி நாய்களின் அக்கிரமத்துக்கு முடிவே இல்லையா? ஏன் இல்லை என்று கேட்டு நீதியை நிலைநாட்டியிருக்கிறார் மாயாதியாகியின் சகோதரர். அந்த அக்கிரமத்தை முன்னின்று நடத்திய இன்ஸ்பெக்டர் நரேந்தர் சிங்கை அதே பாக்பட் நகரில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது சுட்டுக் கொன்று நீதியைத் தானே நிலைநாட்டினார் மாயதியாகியின் சகோதரர்!

-மாணிக்கவாசகம்.



படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவின் சகபாடி வீர்பகதூர் சிங்

# ராஜ்ஜியத்தை ஆளும்கதை!

இது வித்தியாசமான போட்டி. அரசியலில் தாக்குப் பிடிக்கும் போட்டி. இந்தியாவின் மிகப்பெரும் மாநிலங்களில் முதலாவதான உத்தரப்பிரதேசத்தில் நடந்து வருகிறது. பாராளுமன்றத்தின் 'தலைவிதி'யையே தீர்மானிக்கும் மாநிலம் என்று சொல்லும் அந்த இடத்திலிருந்து ஒட்டுக் கட்சிகளின் எல்லாவித விசித்திரங்களும் பிறப்பெடுப்பது தனி வரலாறு.

இன்றைய சாதனை - உ.பி.முதலமைச்சர் வீர்பகதூர் சிங்தான். 'காங்கிரஸ் சாணக்கியன்' கமலபதி திரிபாதியின் முந்தைய சாதனை 800 நாள் ஆட்சி; அதைத் தாண்டி 930 நாட்கள், அதாவது 32 கொந்தளிப்பான மாதங்களைத் தாண்டி 'வெற்றிக்கொடி' நாட்டியிருப்பவர் வீர்பகதூர் சிங்.

எத்தனைப் பாடு பட்டிருந்தால் இப்படி ஒரு சாதனையை எட்டியிருப்பார்கள்? - இப்படித்தான் கேட்டார்கள் பல ஒட்டு விற்பன்னர்கள்.

ஒன்றும் வேண்டாம் —மாண்புமிகு வீர்பகதூர் சிங்கின் அலங்கார அந்தரங்க ஆலோசனை மண்டபத்திற்குள் கொஞ்சம் எட்டிப்பார்த்தால் கூடப் போதும், உண்மை புரியக் கூடும்.

அதோ, வீர்பகதூர்சிங், கதர் வேட்டி, கதர் சட்டை, அதன்மேல் கையில்லாத சிறுகதர்க் கோட்டு. சுற்றி பல வட்டங்களில் கூட்டம். மிக மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. அறைக்குள் கதர்குர்தாவுடன் ஓர் இளைஞன் நுழைகிறான். டெல்லியிலிருந்து வந்திருப்பதாகச் சொல்லி ஒரு கடிதத்தையும் நீட்டுகிறான். அடியாள்போல ஒருவர் வாங்கி அதை மாண்பு மிகு முதலமைச்சரிடம் கொடுக்கிறார் அலட்சியமாக அவர் வாங்குகிறார்; உரக்கப் படிக்கிறார்; கையிலேயே வைத்துக்கொள்கிறார்; அருகே இருப்பவர்களிடம் அதைப்பற்றிச் சொல்கிறார். ஓர் போலீஸ் அதிகாரியை இடம் மாற்ற வேண்டுமாம். டெல்லியிருந்து உயர்மட்ட அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் ஒருவர் எழுதிக் கேட்டிருக்கிறார். வீரபகதூர் தயவு செய்ய வேண்டும்; ராஜீவ் சமூகத்துக்குச் சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டும்.

பேச்சு எங்கெங்கோ சுற்றுகிறது; சூடு பிடிக்கிறது; தொடருகிறது. கவன மறதியாக வீரபகதூர் கடிதத்தைக் கூம்பு வடிவமாக ஆக்குகிறார்; அதோடு விளையாடுகிறார்; காதுக்குள் விட்டுக் குடைந்து கொள்கிறார்.

ஐயய்யோ என்று யாரும் அலறவில்லை; பதறவுமில்லை; மரியாதையோடு, பயபக்தியோடு அடுத்து என்ன சொல்வார், என்ன நடக்கும் என்று காத்திருக்கிறார்கள். சாமியாடியிடம் அருள் கேட்கக் காத்திருப்பது போல. ஒரு நொடியில் அக்கடிதத்தைக் குப்பைக் கூடையில் வீசி எறிகிறார்; மிகச் சாவகாசமாக இளைஞரைப் பார்த்து "நீ இப்போ போகலாம். என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்கிறோம்."

ரொம்பவும் மேலிடத்திலேயே அவருக்குப் பலமான பின்னணி இருப்பதாகத் தெரிகிறது; ஆனாலும் இவ்வளவு அகந்தையா, திமிரா? ஆமாம் — அதுதான் வீரபகதூர். டெல்லிதர்பார் சுல்தான் ராஜீவுக்கு வேண்டப்பட்ட ஒருவர் இப்படிச்செய்யாமல் வேறு யார்தான் செய்ய முடியுமாம்? என்ன செய்தார் இப்படி ஆவதற்கு? அங்கேதான் இருக்குது சூட்சுமம்!



85 ஆம் ஆண்டு வீரபகதூர்சிங் பதவி ஏற்ற போது சீக்கிரத்தில் விழுந்து விடுவார் என்று தான் நினைத்தார்கள். வளமான அரசியல் பின்னணி, அரசியல் குடும்ப பாரம்பரியம், பந்தா எதுவும் இல்லை. எல்லோர் மத்தியிலேயும் சட்டைக்குள் கையை விட்டு தொந்தியைச் சொரிந்து கொண்டிருக்கும் ஒரு காட்டான், கிராமத்துக் கர்ணம் போல இருக்கிறவன் எங்கே தேறப்போகிறான்? — அவர் காதுபடவே பேசினார்கள்.

930 நாள் சாதனையைப் பற்றி எப்படிப்பார்த்தாலும் விளங்கிக் கொள்ள முடியாமல் அவரையே கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதில், சாதனையைவிட பிரமிப்பு தருகிறது. "நான் ஒரு போராளி" "30 வருடம் போராடி இந்த இடத்துக்கு வந்திருக்கிறேன்"

அங்கேதான் சூட்சுமம் இருக்கிறது. அரசியல் பிழைப்பில் கால் ஊன்றுவதற்காகப் 'போராடிய' (?) ஒரு நபர் வித்தைகளை நன்றாகக் கண்டிருப்பார்; நல்லதேர்ச்சி அடைந்திருப்பார். இதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று அவர் சொல்லாமல் சொல்லுகிறார்.

முன்பு தெரிய வந்ததைவிட இப்போது அவரது தந்திரங்கள் அதிகமாகப் பேசப்படுகின்றன. வி.பி.சிங் என்றொரு பூதம் ராஜீவின் கனவுகளில் வந்து கொட்டமடிக்கத் தொடங்கிய பிறகு, வி.பி.சிங்கின் சொந்த மாநிலமான உ.பி.யில் அவரது சவாலைச் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் வீரபகதூருக்குத் தரப்பட்டது. அது மிகப்பெரும் கவுரவமான வேலை. இத்தனை ஆண்டு அநுபவங்களையும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார் வீரபகதூர்.

வி.பி.சிங் மந்திரி சபையிலேயே இருந்தவர். அதனால் வி.பி.சிங்கின் நுணுக்கங்கள் இவருக்கு மனப்பாடம். களத்திலே எங்கே பிடித்தால் வி.பி.சிங் வசமாக மாட்டுவார் என்று அவருக்குத் தெரியும்.

எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வேண்டியதெல்லாம் செய்து, காங்கிரசுக்குள்ளேயே கலகக்காரர்களை அடக்கி வைத்து கோலகலமாக ஆட்சி புரிந்து வரும் வீரபகதூர் ஒரே ஒரு கேள்வி தான் கேட்டார்: "யாருய்யா இந்த வி.பி.சிங்? வரச்சொல் வந்து ஒரே ஒரு கூட்டம் போடச்சொல்! தொண்டர்களே இல்லாத தலைவர் ஒரு தலைவரா?"



படிப்பகம்

www.padippakam.com

வி.பி.சிங் காங்கிரசை விட்டு வெளியேறிய, வெளியேற்றப்பட்ட சமயம் உ.பி.யில் 100 எம்.எல்.ஏக்கள் அவரது விருந்தில் கலந்து கொண்டார்கள்; பிறகு அவரது ஜன மோர்ச்சாவில் 18 எம்எல்ஏக்களும், 4 மந்திரிகளும் சேர்ந்தார்கள். அதற்குப்பிறகு கோரக்பூர் -சுல்தான்பூரில் அவர் பேரணி நடத்தினார். அப்போதும், அதற்குப் பிறகும் காங்கிரசிலிருந்து ஆட்கள் 'கழண்டு போகாமல்' வீரபகதூர் பார்த்துக் கொண்டார்.

தந்திரம் என்று சொல்லலாம்; உள்ளூர் மோஸ்தர் என்று சொல்லலாம்; உள்ளூரில் பிரபல ஜமீன் என்று சொல்லலாம். கடைந்தெடுத்த அத்தனை அயோக்கிய 'கல்யாண' குணங்களும் நிரம்பிவர் வீரபகதூர்.

உ.பி.யில் முதல் இரண்டு வருடங்களுக்குள்ளேயே எல்லா விளம்பரங்களும் தேடிக்கொண்டார். சரியான நிர்வாகமே கிடையாது; திட்ட அளவுக்குச் செலவுகளும் செய்யவில்லை - திட்டங்களும் இல்லை; 671 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 15,16 ஆண்டுகளாகத் தேர்தல்கள் இல்லை. இதோ, அதோ என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார். 10 ஆண்டுகளாக 8000 கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் இல்லை. இது தவிர - அரசு ஊழியர், மாணவர், விவசாயிகள் போராட்டங்கள்; மீரட் மதக் கலவரங்கள். எதற்கும் பொறுப்பு ஏற்காமல் மக்களிடமிருந்து தப்பி வந்திருக்கும் வீரபகதூர் மிகச்சரியான குண்டனாக வி.பி.சிங்கைச் சந்திக்கத் தயார் என்கிறார். ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே? சொந்த அநுபவம் வேறு.

ஓட்டு அரசியல் சூதாட்டத்தில் காய்களை நிறுத்துவது, எதிர் ஆட்டக்காரரின் காய்களை மறிப்பது, வெட்டுவது-கொல்லுவது வீரபகதூருக்கு மனப்பாடம். வேலையே நடக்காமலிருந்தாலும், அன்றாட அரசியல் விளம்பரம் தேடுவதில் கில்லாடி.

ஆட்சிக்கு வந்ததுமே அசுர வேகத்தில் அவர் எடுத்த நடவடிக்கைகள் அமைச்சர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் திகில் ஊட்டின; மக்களுக்குப் பிரமிப்பாக இருந்தன. தலைமைச் செயலகத்தை நேரந்தவறாமல் வேலை செய்யச் சொல்லி வாயில் கதவுகளை காலை நேரங்களில் நேரத்தோடு மூடி விட்டார். சாவி அவர் கையில். மந்திரிகள் எம்.எல்.ஏக்களையும், மக்களையும் அடிக்கடி சந்திக்க வேண்டும்.

அவரது மந்திரிசபையிலேயே போட்டியாக இருந்த கமலாபதி திரிபாதி மகன் லோக்பதி திரிபாதி, லால் பகதூரின் மகன் சுனில் சாஸ்திரி (தற்போது வி.பி.சிங்கை எதிர்த்து அலகாபாத் தேர்தலில் நிற்பவர்) இருவருக்கும் ஏகப்பட்ட வேலைச்சுமைகளை ஏற்றி முடக்கி வைத்தார். வம்பு செய்கிற மாட்டைப் பொதி சுமக்க வைப்பது போல என்பார்கள். வெள்ள நிவாரணக் கமிட்டிகளுக்கு போக்பதி திரிபாதியைத் தலைவராகப் போட்டு மூச்சு முட்ட சுமைகளைப் போட்டார். வி.பி. சிங்கோடு குலாவுகிறார் என்று சொல்லி சுனில் சாஸ்திரியைப் பதவி விலக வைத்தார். சுருக்கமாக அவர் சொன்னார்: "பாடுபட்டால்தான் யாரும் வாழமுடியும். இப்போதாவது எல்லோரும் உணரட்டும். பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டுமா? யாராயிருந்தாலும் அவர் தன்னைச் சரியான ஆள் என்று நிரூபிக்க வேண்டாமா?



# இன்னொரு ராஜீவ் உருவாகிறார்!

முதலில் போட்ட உத்தம வேடங்கள் களையாமல் இல்லை; களைந்தன. ஆனால் சாமர்த்தியமான பிழைப்புவாதி வீரபகதூர் இந்தக் கலையில் வல்லவராக இருந்ததால் எத்தனையோ ஆயிரம் வேடங்களில் ஒன்றை அவ்வப்போது வேகமாக எடுத்துக் கொண்டார். நடிகராக இருந்து எம்.ஜி.ஆர். என்.டி.ஆர் கற்றுக்கொண்ட வேடங்களை 30 வருட பயிற்சிக் காலத்திலேயே கற்று விட்டார் வீரபகதூர்.

கட்சிகளை மட்டுமல்ல, ஊழல் செய்த அதிகாரிகளின் மீதும் அதிரடி நடிவடிக்கை எடுத்துப் பயமுறுத்தினார் எல்லாம் ஆரம்பத்தில் மட்டும் தான். ஒரு 'உதாரு'க்காக. இந்தச் சோதனைகளை எல்லாம் நடத்தி ஒரு மாதிரியான கணக்குப் போட்டு வைத்திருந்த நேரத்தில் தான் வி.பி.சிங் என்ற சோதனை அவருக்கு வந்தது.

வீரபகதூர் சிங் அயரவில்லை. வி.பி.சிங்குக்கு ஆதரவான எம்.பி.க்களை அழைத்து மிரட்டினார்; அவர்களில் சிலர் மீதுள்ள கிரிமினல் குற்ற வழக்குகளை எடுத்து மேசை மேல் போட்டு 'என்ன தெரிகிறதா, வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்!' என்ற தோரணையில் மென்மையாகக் கடிந்து கொண்டார்; இன்னொருவர் வங்கிகளில் கழுத்துமுட்டக் கடன்கள் வாங்கி அனுபவித்திருந்தார். 'என்ன ஏதோ ஜப்தி செய்யணுமாம், உங்களுக்கு இந்த நிலை வேண்டாம்!' என்று துக்கம் விசாரித்தார்.

டிச 5, 1987 - வி.பி. சிங் உ.பி. விஜயம் செய்தார். வீர பகதூரின் சொந்த ஊரான கோரக்பூருக்கே வந்தார். கண நேரப்பித்துப்பிடித்து யாராவது எம்.எல்.ஏக்கள் அங்குபோய் நின்று விட்டால் இவர் மானமரியாதை கவுரவம் என்ன ஆவது? அன்று சட்ட மன்றத்தில் முக்கிய மசோதாக்களை விவாத்துக்குக் கொண்டு வந்தார். கட்சியிலிருந்து கொறடா அனுப்பினார்: "எல்லோரும் சபைக்கு வர வேண்டும். மதிக்கவில்லை எனில் நீக்கப்படுவார்கள்". அத்தனை எம்.எல்.ஏக்களும் வாலைச்சுருட்டிக் கவட்டைக்குள் சொருகிக் கொண்டு கப்சிப் என்று அடங்கிப் போனார்கள்.

சாம பேத தான தண்டம் அத்தனையும் வீரபகதூருக்கு அத்துப்படி. இதில் தானமும் தண்டமும் அடிக்கடி அவர் கைக்கு வரும் சரக்குகள். இரண்டையும் கட்சியிலிருந்தே தொடங்கி நடத்தி வைத்தார். எம்.எல்.ஏ., எம்.எல்.சிக்களுக்குச் சம்பள உயர்வு தாராளமாகவே செய்தார். 'அடுத்த வீட்டு நெய்யே....' என்பார்கள். அதுபோல மாதச்சம்பளம் 2500 லிருந்து 4050 ஆகியது; மொத்தச் செலவு 5 கோடிக்கு அதிகமாகியது; கவலைப்படவில்லை.

அரசு ஊழியர்கள் போராடினார்கள்; இழுக்கடித்து இழுக்கடித்து 250 கோடி ரூபாய் சலுகையில் 'பேரத்'தை முடித்தார். திக்காயத் தலைமையில் விவசாயிகள் போராடியபோது குறிப்பாக மேற்கத்திய மாவட்டங்களில் வி.பி.சிங் செல்வாக்கு இருந்த பகுதிகளுக்கு ஆழ்த்துளைக் கிணறுகளுக்காக மின் கட்டணச் சலுகை வழங்கினார்; கைக்குழாய் வசதி, ரோடு வசதி என்று அடுக்கிக் காட்டினார். 30 கோடி சிறிய மீனை விட்டுப்பார்த்தார்.


போராட்டங்கள் நடக்கும் போதெல்லாம் யார்மீதாவது பழியைப் போட்டுவிடுவார். மார்ச் 86-ல் விஸ்வ ஹிந்து பரிஷத் ரத யாத்திரை நடக்கத் திட்டமிட்டது. இரண்டு மடாதிபதிகளை (மகந்துக்களை) விலைக்கு வாங்கி ரதயாத்திரையை தடுத்து நிறுத்தி மத மோதலைச் சமரசப்படுத்தினார். போராட்டத்துக்கு மூல காரணம் விஸ்வ ஹிந்து பரிஷத் தான் என்று அறிவித்தார்.

சினிமா தியேட்டர் சொந்தகாரர்கள் வேலை நிறுத்தம் செய்த போது இதன்பின்னால் வி.பி.சிங்சதி நடந்திருக்கிறது என்று குற்றம் சாட்டினார்.

மாணவர்கள் சங்கத்தேர்தலுக்காக நியாயமாகப் போராடியபோது

படிப்பகம்

www.padippakam.com



## வெள்ளப் பகுதியைப் பார்வையிடுகிறாராம் : சுகமாகத் தூங்குகிறார் வீர்பகதூர் சிங்!

தூண்டி விட்டவர்கள் லோக்புதி திரிபாதியும், அவரது மனைவி சந்திரா (காங்கிரஸ் எம்.பி) வும் தான் என்று பழியைச் சாட்டினார்.

அரசு ஊழியர்கள் போராடிய போது தன் சக அமைச்சர்களையே பழி கூறினார்.

எந்தப் பிரச்சனைகளை வேண்டுமானாலும் வையுங்கள்; அது ஏன் எழுந்தது, எப்படித் தீர்ப்பது என்பதெல்லாம் வீரபகதூர் சிங்குக்கு முக்கியமல்ல-அப்பிரச்சனையை எப்படித் தள்ளிப் போடுவது? பொறுப்பில் இருந்து எப்படி நழுவுவது யார் மீதாவது பழியை போட்டு எளிதில் அரசியல் விளம்பரம் தேடுவது - உண்மையான காரணங்களில் இருந்து திசை திருப்புவது - இது தான் வீரபகதூரின் தனி முத்திரை. வி.பி.சிங் மவுசு ராஜீவுக்கு போட்டியாக வந்த பிறகு ராஜீவிடம் நல்ல பெயர் எடுப்பது தான் வீரபகதூரின் ஒரே அம்ச திட்டம். அலகாபாத் இடைத்தேர்தலில் வி.பி.சிங் நிற்பது உறுதியாகிவிட்டதால் அதை சமாளிப்பது அவசர வேலை.

இதற்காகவே திட்டமிட்டு பிரதமர் கலந்து கொள்ளும் உ.பி. மாவட்ட மாஜிஸ்ரேட்டுகளின் பட்டறையை நடத்தினர்

பின்னால் தேவையானவர்களை விலை கொடுத்து வாங்க ஒத்திகை பார்த்துக் கொண்டார் வீரபகதூர்.

விளம்பர மோஸ்தரில் வி.பி.சிங்குக்கு எதிராகப் பிரதமரை நிறுத்த ஜனவரியில் உ.பி. மேல்சபை தங்க விழாவை ஏற்பாடு செய்தார். எதிர்க்கட்சி லோக்தளம் (அஜித்சிங் பிரிவு) தலைவர் சத்யபால் யாதவைச் சரிக்கட்டி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை உடைத்தார். பிரதமர் அமர்ந்த மேடையிலேயே சத்ய பால் யாதவ்வையும் அமரச் செய்து, பேச வாய்ப்பு கொடுத்து எதிர்க்கட்சிகளின் வாயை அடக்கினார். பிரதமர் அடிக்கடி வரும்படி நிகழ்ச்சி ஏற்பாடு செய்து வி.பி.சிங்கிற்கு எதிராக பிரதமரின் விளம்பரத்தை செய்து கொடுத்தார்.

அலகபாத்தில் காங்கிரசின் விளம்பர நாடகத்தை நடத்துவதற்காகவே அருகே உள்ள சாமு என்ற கிராமத்திற்கு உப்பு சத்தியாக்கிரகப் பாத யாத்திரையை முன்னின்று நடத்தினார். ''பிரிவினை, பிற்போக்குக்கு எதிராக பாத யாத்திரை'' என்று விளம்பரம் செய்தார். உள்ளூர் மக்கள் மண்ணிலிருந்து உப்பு எடுத்து வாழ்கிறார்கள் என்று கூறி அங்கு உப்புச்சத்தியாக்கிரகம் நடப்பதைக் கேலி செய்தார்கள் எதிர்க்கட்சியினர். ''எல்லா இடங்களிலும் அன்று உப்பு எடுத்தார்கள்'' என்று புதிய சரித்திரத்தை அறிவித்தார் வீரபகதூர் கோமாளி. பிரதமரின் நகலாக தப்பாது வந்திருக்கும் ஆள் என்பதைச் சரியாகவே காட்டிக் கொண்டார்.

அலகாபாத்துக்கு அமைச்சர்களோடு சூறாவளி சுற்றுப்பயணம் அறிவித்துள்ளார்; 31 லட்ச ரூபாய் செலவில் பொது நூலகம், 1.5 கோடி செலவில் பாலம் கட்டும் பணி என்று புதுப்புது திட்டங்களை மக்களுக்கு அறிவித்துள்ளார்; மொத்தமாகப்பார்த்தால், எது ராஜீவுக்குப் பலன் தருமோ அவர் உடனே அதைச் செய்யத் தயார். அதுவே தனக்கும் நல்லது என்று கருதினார். 4 மாதங்களில், 2 மாதங்களுக்கு டெல்லியிலே இருந்தார் வீரபகதூர், அதற்காக விமானப் போக்குவரத்தில் மட்டும் லட்சக்கணக்கில் செலவு. ஆட்சி விளம்பரத்துக்காக மக்களுக்கு வாக்குறுதிகள்; திட்டத்தில் வராத செலவுகள்; டெல்லித் தலைவர் வழியிலேயே 31 கலாச்சார விழாக்களுக்கு 4 கோடி ரூபாய் வாரி இறைத்திருக்கிறார்.

தனது பிழைப்புக்காக எதையும் செய்யத்தயாராக உள்ள வீரபகதூர் சிங் போன்ற முதலமைச்சர்களை வைத்துக் கொண்டே, காங்கிரஸ் மாநாட்டில் எம்.ஜி.ஆரின் விளம்பரத் திட்டங்களை விமரிசித்தார் ராஜீவ். மக்களின் பணத்தை எடுத்து - மக்களுக்கு எதிராக - மக்களை ஏமாற்ற எம்.ஜி.ஆர் எத்தனைக் பொருளாதார-கிரிமினல்- குற்றங்களைச் செய்தாரோ அதற்குச் கூடுதலாகவே செய்திருக்கும் பேர்வழி தான் வீரபகதூர்.

ஓட்டு அரசியலில் தாக்குப் பிடிப்பதற்காகவே வீரபகதூர் சிங்குகள் வாரி இறைக்கும் பணம் யாருடைய பணம்? ஏறி மிதித்து மக்களைக் கொல்லும் சுய விளம்பரப் பித்தர்களின், கொலைகாரர்களின் பட்டியல் என்று இறுதியாகும்? ஓட்டுக்கட்சி வாண வேடிக்கைகளில் மயங்காமல் அவற்றுக்கு வேட்டு வைக்கும் போது தான் நாறிப்போன வீரபகதூர் சிங்குகளின் விளம்பரப் பட்ட வீர வேடங்கள்(?), சாதனைகள்(!) தூள்தூளாகச் சிதறி விழும்.

— வேலாயுதம்

## கடலே இல்லாத இடத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடத்துகிறார் வீரபகதூர் சிங்!



படிப்பகம்

www.padippakam.com



# எதிரியின் கோட்டைக்குள்ளேயே இடிமுழக்கம்!

''சிறைச்சாலை எங்களுக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை'' என அழகான அடுக்கு மொழிக்கு மட்டும் கூற வில்லை, பிழைப்புவாத ஓட்டுக்கட்சியினர். உண்மையான அர்த்தத்திலும் சிறைச்சாலைகள் ஓட்டு கட்சி தலைவர்களுக்கு உல்லாசமாக பொழுதைக் கழிக்கும் சுகமான இடமாகத் தான் இருக்கிறது! ஆனால் புரட்சியாளர்களுக்கோ, சிறைக் கொட்டடிகள் சித்திரவதை கூடாரங்களாக இருப்பது எண்ணற்ற சம்பவங்களினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு புதிய விடியலுக்காக, புதிய சமுதாயத்தை படைப்பதற்காக போராடும் புரட்சியாளர்கள், சித்திரவதைக் கூடாரங்களாக வாய்பிளந்து நிற்கும் சிறைக்கொட்டடிகளைக்கூட புரட்சியின் பாசறைகளாக மாற்றிய வரலாறுகள் பல உண்டு. இதோ! அவர்கள் வழியில் செல்லும் புரட்சிகர அமைப்புகள்...

ஏப்ரல் மாதம் இறுதியில் சென்னையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் பங்கேற்க வந்த பாசிச ராஜீவின் பாதுகாப்புக்காக என, மக்கள் கலை இலக்கிய கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிப் பண்பாட்டு இயக்கம், மற்றும் முற்போக்கு இளைஞர் அணி போன்ற புரட்சிகர அமைப்புகளின் தோழர்களை கைது செய்து பொய்வழக்கு ஜோடித்து சிறையில் அடைத்தது, காங்கிரசு எடுபிடி கவர்னர் அலெக்சாண்டரின் தலைமையிலான தமிழக போலீசு,

இவ்வமைப்பின் தோழர்கள் சிறையில் அடைக்கப்பட்ட போதும் புரட்சிகர அரசியலை எப்படி புயலாக எடுத்துச் சென்றனர் என்பதை விவரிக்கிறார் மக்கள் கலை இலக்கிய கழகத்தின் தஞ்சை கிளை செயலர் தோழர் காளியப்பன்.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

கடந்த 18.4.88 அன்று இரவு சுமார் 11.30 மணி. அப்போதுதான் படுத்தேன். நில நிமிடங்களில் இரண்டு மூன்று டார்ச்லைட் வெளிச்சம் வீட்டுக்குள் பரவியது. சந்தேகத்துடன் கதவைத் திறந்தேன். வீட்டு வாசலில் தஞ்சை மேற்குக் 'காவல்' நிலைய போலீசு கும்பல் மொத்தமாக நின்றிருந்தது. அதில் ஒரு போலீசு, ''டி.எஸ்.பி. ஏதோ விசாரிக்க அழைப்பதாக'', கூறினார். ''என்ன விஷயம்''? என்றுக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவர்களுக்கு தலைமைதாங்கிய எஸ்.ஐ. சோம சுந்தரம் வீட்டுக்குள் நுழைந்தார். ''வீட்டில் பெண்கள் இருக்கிறார்கள்'' என்று கூறிய போதும், வீட்டிலிருந்த புத்தகங்கள், டேப் முதலிய பொருட்களின் மீது ஒரு கண்ணோட்டம் விட்டுவிட்டு வெளியில் போனார். மீண்டும் ''என்ன விஷயம்''?, என்று கேட்ட போது ''சும்மா, விசாரிக்கத்தான்'' என்று என்னை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். பிறகு எஸ்.ஐ அறையில் அடைத்து விட்டு காலையில் வருவதாக கூறிவிட்டு சென்றது போலீசு கும்பல்.

மறுநாள் காலை, என்மீது முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) தயாரித்து முன்னெச்சரிக்கை கைதுக்காக கோர்ட்க்கு அழைத்துச் சென்றது போலீசு. பிறகு விசாரணைக் கைதியாக 15 நாள் காவலில் வைக்க திருச்சி மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றது. அதற்கு முன்னரே அச்சிறைக்கு, தோழமை அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணி திருவோணம் ஒன்றிய அமைப்பாளர் தோழர் ராம. துரைமாணிக்கம், திருவையாறு ஒன்றிய அமைப்பாளர் தோழர் ஜெயசீலன் மற்றும் வி.வி.மு தோழர்கள் திருஞானம், குருமூர்த்தியும், அன்று இரவு, மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் திருச்சி கிளை தோழர்கள், மற்றும் புரட்சிகர அமைப்பான, புரட்சி பண்பாட்டு இயக்கம், முற்போக்கு இளைஞர் அணி தோழர்கள், ஆகியோரும் சிறைக்கு கொண்டுவரப்பட்டனர். இன்னும் ஓடுகாலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், தன்னார்வ குழுக்களால் இயக்கப்படும் இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் பலரும் வரிசையாக கைது செய்யப்பட்டனர். இது தவிர சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளும் ஏராளமாக சிறைக்கு கொண்டு வரப்பட்டனர்.

நான், முன்பு குடமுருட்டி குண்டு வெடிப்பு வழக்கில் சந்தேகத்துக்கு ஆளானவர் என்றும் இப்போது ராஜீவ் ஒழிக, மகஇக வாழ்க என்று சுவரில் எழுதியதாகவும், அதனால் என்னை கைது செய்ததாகவும்; தோழர் துரைமாணிக்கம், மற்றவர்களுடன் சேர்ந்துக் கொண்டு, காங்கிரசு மாநாட்டுக்குப் போகும் வாகனங்களை செங்கல்பட்டில் நின்று தடுக்க சதியாலோசனை செய்ததாகவும், பு.ப.இ அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் பொதிய வெற்பனும், மேகநாதனும் குடந்தை பேருந்து நிலையம் அருகில் நின்று கொண்டு ராஜீவுக்கு வெடிகுண்டு வீச திட்டமிட்டுக் கொண்டிருந்ததாகவும், பொய் வழக்கு ஜோடித்தனர்.

அப்பாவிகளை கைது செய்ய, போலீசு கும்பல், இதைவிட பல ருசிகரமான அதி நவீன முறைகளை (ராஜீவை போலவே) கையாண்டது, சிறையில் தெரிய வந்தது.

தஞ்சையில் - கீழவாசல் போலீசார் இருவரை கைது செய்திருக்கிறது. அதில் ஒருவர் தஞ்சை பேருந்து நிலையம் அருகில் உள்ள 'டீ' கடையில் 'டீ மாஸ்டர்' வேலை பார்ப்பவர். மற்றொருவர் பக்கத்து கிராமத்திலிருந்து தஞ்சை பொது மருத்துவ மனைக்கு வந்திருந்தவர். இருவரும் தங்களை விட்டு விடுமாறு போலீசிடம் கெஞ்சியபோது, போலீசு கும்பல் இருவரில், யாராவது, ஒருவராவது எங்களுடன் வர வேண்டும்'' என்று சொல்லி, யாரை அழைத்துச் செல்வது என்று தீர்மானிக்க ஒரு காசைச் சுண்டி பூவா தலையா போட்டு பூ கேட்டவரை விட்டு விட்டு தலை கேட்டவரை கைது செய்திருக்கின்றனர். இப்படி ஏராளமான முறைகள்...

சிறையில், 20.4.88 அன்று நாங்களும், பலதரப்பட்ட அமைப்பை சேர்ந்தவர்களும் இணைந்து ஒரு குழுவை தேர்ந்தெடுத்தோம். சிறையில் உள்ள பிரச்சினைகளைச் கையாளவும் தினமும் புரட்சிகர நிகழ்சிகளை நடத்தவும் அக்குழுவுக்கு பொறுப்பளித்தோம். இதில், பெரும்பாலான விஷயங்களில் முடிவெடுப்பதிலும் நடத்துவதிலும், விவிமு, மகஇக, புபஇ, முஇஅ அமைப்பு தோழர்களே செல்வாக்கு செலுத்தினர்.

முதல் இரண்டு நாட்களிலும் 'பாசிச ராஜீவ் வருகையும் நமது கைதும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல்நாள் கைதை கண்டித்தும், புரட்சியாளர்களை சமூக விரோதிகள் என்று தூற்றும் பாசிச ராஜீவ் கும்பலின் அவதூறை கண்டித்தும், ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த ஈழ அன்னையர் முன்னணியைச் சேர்ந்த தாய்க்கு அஞ்சலி தெரிவித்தும் முதல் நாள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாள் 'பாராளு மன்றப்பாதை' பற்றி கருத்தரங்கம் நடைபெற்றது. முன்னதாக 'தேர்தல் பாதை திருடர் பாதையே' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடத்தலாம் என்பதை ஓடுகாலிகளும், இமமு அமைப்பினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு 'பாராளுமன்றம் பற்றி' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. நான், ஜெயசீலன், துரை மாணிக்கம், பொதியவெற்பன், இன்னொரு முஇஅ தோழர் ஆகியோர் தேர்தல் பாதை எப்படி திருடர் பாதை என்பதை அம்பலப்படுத்தினோம். ஓடு

படிப்பகம்

www.padippakam.com

காலிகள், இமமு மற்றும் பிறர் பாராளுமன்றப் பங்கேற்பை நியாயப்படுத்துவதில் தோற்றுப் போனார்கள். நம் தோழர்களின் பேச்சு புரட்சிகர அரசியலின் மேலாண்மையை நிறுவியது. பிற அமைப்புத் தோழர்கள் மிகவும் வியந்தனர். அன்று மதியம் இமமுவினர் தங்களுக்குள் சித்தாந்தப் போராட்டத்தால் தூண்டப்பட்டு அதில் ஒரு பிரிவினர் நமது கருத்து சரிதான் என வலியுறுத்த, அவ்வமைப்புக்கு தலைமை தாங்கியவர்கள், கேள்வி கேட்பவர்களை நம்மிடம் பேச விடாமல் தடுக்க, வேறு அறைக்கு பிரிந்து சென்று விட்டனர். 22ந்தேதி பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசான் லெனின் பிறந்த நாளையும், நக்சல்பாரி கட்சியின் 19வது ஆண்டு தொடக்க விழாவையும் எழுச்சியூட்டும் வகையில் நடத்தினோம்

இவ்வாறு ஒவ்வொரு நாளும், புரட்சிகர அரசியலும், கலை நிகழ்ச்சியும், பெரும்பான்மையான தோழர்களின் பங்கேற்புடன் புரட்சிகர உணர்வுடன் சிறைக்குள் இடிமுழக்கமாக எழுந்தது. பிற நேரங்களில் புரட்சிகர அமைப்பின் தோழர்களுடனும், மற்ற உதிரி நபர்களுடனும் மிக நீண்ட அரசியல் விவாதங்கள் நடத்தினோம்.

29.4.88 அன்று உடனடியாக விடுதலை கோரி உண்ணா விரதம் தொடங்கினோம். இ.ம.மு.வினர் 'ஒரு நாள் மட்டுமே உண்ணாவிரதம்' என்றனர். ஆனால், பிற அமைப்பு தோழர்கள் விடுதலையாகும் வரை உண்ணாவிரதம் என்பதில் உறுதியாக இருந்தனர். பாசிச ராஜீவ் கும்பலை அம்பலப்படுத்தும் முழக்கங்களுடன் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது. உடனடியாக, உதவி சிறை அதிகாரியும், சிறைக் கைதிகள் நல அதிகாரியும் வந்து, 'உண்ணாவிரதத்தை கை விடுமாறும், இல்லையேல் கடுமையாக நடவடிக்கை எடுப்போம்' என்று மிரட்டி பார்த்தனர். தோழர்கள் யாரும் பணியவில்லை. அன்று மாலை, சிறை அதிகாரி வந்து 'இரவு விடுதலை செய்துவிடுவோம்' என உறுதியளித்தார். அதன்பேரில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டோம். அவ்வாறே அன்று இரவு பெரும்பாலானோர் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர்கள், பிற அமைப்பு ரீதியானவர்கள் 16 பேர் 30ந் தேதி மாலைதான் விடுவிக்கப்பட்டோம்.

புரட்சிகர அமைப்பின் தோழர்கள் சிறையில் இருந்த போது கூட காட்டிய கட்டுப்பாடு, அரசியல் தெளிவு, அஞ்சாமை பண்புகள் மற்றவர்களிடத்தில் உயர்ந்த மதிப்பைப் பெற்றுத்தந்தன. புரட்சி பேசும் போலிகளின் பித்தலாட்டம் அம்பலப்பட்டது. அப்பாவி சிறைக் கைதிகள், அரசியலை தெரிந்துக் கொள்ளவும், தெளிவடையவும் எங்களது சிறைவாசம் உதவியது. ●

# சினிமா நடிகை கற்பழிப்பு விவகாரம்

## சமூக விரோதிகளின் கூட்டு

"சினிமாக்காரன்கள் என்றால் அவர்கள் எவ்வளவு அயோக்கியத்தனங்கள் செய்தாலும் கண்டு கொள்ளக் கூடாது. சமூக நீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு எல்லாவற்றுக்கும் மேலானவர்கள் சினிமாக்காரன்கள்" என்கிற நியதியை உருவாக்கும் கூட்டு முயற்சியில் சினிமாக்காரன்கள், போலீஸ்காரன்கள், ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் இறங்கியுள்ளனர். சுதா என்கிற துணை - நடன நடிகையை பிரபல சினிமா நடிகன் பாண்டியனும் அவனது கூட்டாளிகளும் கற்பழித்த வழக்கை அமுக்கிவிட இந்தக் கூட்டுக் கும்பல் முயல்வது அப்படிப்பட்டதொரு விவகாரம்தான்!

இரண்டு மாதங்களுக்கு முன்பு, சினிமா படப்பிடிப்புக்கு வரும்படி துணை-நடன நடிகை சுதாவைக் கடத்திக் கொண்டு போய் சென்னை அண்ணா நகரில் உள்ள ஒரு பங்களாவில் வைத்து பிரபல சினிமா நடிகன் பாண்டியனும் டான்ஸ் மாஸ்டர் ஜான்பாபு அவனுடைய நண்பன் ரவியும் மாறி மாறிக் கற்பழித்தனர். அந்தப் பங்களா உடமையானனும் கற்பழிக்க ஏற்பாடு செய்தனர். இன்னொரு துணை-நடன நடிகை உடந்தையாக - தாசியாக இருந்து சுதாவைக் கடத்திப் போயிருக்கிறார்.

சினிமா நடனக் கலைஞர் சங்கத் தலைவரிடம் சுதாவின் குடும்பத்தினர் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கக் கோரினார்கள். நடிகன் பாண்டியனைத் தவிர மற்றவர்களையும் சுதாவின் குடும்பத்தையும் வைத்துப் பேசி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வைத்ததாக சங்கத் தலைவர் சலீம் கூறுகிறார். சங்கத்தின் மூலம் உருப்படியான நடிவடிக்கை எதுவும் எடுக்காமல் போகவே கோடம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் போய் புகார் கொடுத்தனர் சுதாவின் குடும்பத்தினர். வழக்கை எடுக்காமல் விருகம்பாக்கம் போலீஸ் நிலையத்துக்குப் போகும்படி விரட்டினார்கள் அங்கிருந்து கருணாநிதிநகர் போலீஸ் நிலையத்துக்குப் போகும்படி விரட்டினார்கள். அங்கும் நடிகன் பாண்டியனைத் தவிர மற்றவர்களைக் கூப்பிட்டு விசாரித்தனர். குற்றத்தை அவர்களும் ஒப்புக் கொண்டனர். இதற்குள் சம்பவம் நடந்து 45 நாட்கள் ஆகிவிட்டன. அதன் பின்பு மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பினார்கள். பிரதான குற்றவாளியான பாண்டியனோ எந்தப் பாதிப்புமில்லாமல் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தான். விவகாரம் முற்றவே எல்லோருக்கும் ஜாமீன் எடுத்து கூட்டாளிகளை வெளியே வரச் செய்து கொஞ்சமும் கூச்சமோ பயமோ இல்லாமல் சுற்றித் திரிகிறான்.

இப்போது கற்பழிப்பு வழக்கை அமுக்கி, குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் போலீஸ்காரன்கள், சினிமாக்காரன்கள், ஓட்டுப் பொறுக்கி அரசியல் தலைவர்கள் இறங்கியுள்ளனர். தமிழக போலீஸ் ஐ.ஜி ஒருத்தன் மற்றொரு உயர் அதிகாரிக்கு போன் செய்து வழக்கை அமுக்கி விடும்படி கேட்டுள்ளான். பிரபல சினிமா நடிகன் விஜய்காந்தின் பினாமி தயாரிப்பாளனும் காங்கிரசில் சேர்ந்துள்ளவனுமான இப்ராகிம் ராவுத்தர் மூப்பனாரை சந்தித்து பாண்டியனை காங்கிரசில் சேர்ப்பதாகவும், வழக்கை அமுக்கி விடும்படியும் சிபாரிசு செய்தான். அதன்படி நகரக் கமிஷனரும் இ.காங்கிரசு எடுபிடியுமான துரைக்கு மூப்பனார் போன் செய்துள்ளார்.

நடிகன் பாண்டியன் தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்து இந்த விவகாரத்திலிருந்து காபபாற்றும் படி கோரியுள்ளான். பிரபல தி.மு.க. வக்கீல், பாண்டியன் தரப்பில் ஆஜராக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் அரசியல் தொடர்புடைய சில சினிமா தயாரிப்பாளர்கள் பாண்டியன் விவகாரத்தை அமுக்கி விடும்படி நிர்பந்திக்கின்றனர். பாண்டியனுக்கு எதிராக வழக்கு போடவே கூடாது என்று தி.மு.க நடிகரும், நடிகர் சங்கத்



படிப்பகம்

www.padippakam.com

தலைவருமான ராதாரவியும், பிற பிரபல நடிகர்களும் கூச்சல் போடுகின்றனர். நடிகர் சங்கமும் ரசிகர் மன்றங்களும் கூட்டுச் சேர்ந்து ஊர்வலமும் போராட்டமும் நடத்தி குற்றவாளி பாண்டியனை மீட்டும் வேலையில் இறங்கியுள்ளன.

''சுதா ஒரு துணை-நடன நடிகை. அதுவும் மலையாளி. துணை நடிகை என்றாலே, மலையாளி என்றாலே விபச்சாரிதான். . சினிமாத் துறையில் இப்படி நடப்பது எல்லாம் சர்வ சாதாரணம்.எந்த நடிகன்-நடிகைதான் ஒழுங்கானவர்கள்? பணக்காரனும், பிரபலமானவனுமான பாண்டியனை மிரட்டி ''பிளாக் மெயில்'' செய்வதற்கான முயற்சி. தமிழ் நடிகனை வீழ்த்த சதி நடக்கிறது'' — என்றெல்லாம் பேசி காமவெறியர்களின் கிரிமினல் குற்றத்தை மூடிமறைக்கப் பிரச்சாரம் நடக்கிறது.

துணை நடிகையைக் கற்பழித்த காம வெறி நாயகன்-நடிகன் பாண்டியன்



''தமிழ் உணர்வுள்ள, தமிழ் இனத்திற்காகப் பாடுபடுகின்ற நடிகர் பாண்டியன் மீதான பொய் வழக்கைக் கண்டித்து நடிக்கிற இந்தக் கண்டனப் பேரணிக்கு நல்ல தமிழ்ப் பற்று கொண்ட பொதுமக்களும் அனைத்து நடிகர்களின் ரசிகர் மன்றங்களும் மாவட்டவாரியாகக் கலந்து கொள்ளும்படி'' அறை கூவுகிறான் நடிகர் சங்கத் தலைவன் ராதாரவி. ''ஒரு மலையாளச்சிப் பெண் அவதூறாக கற்பனையாக தமிழ் நடிகர் பாண்டியன் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதால் இன்று கௌரவமாக வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.'' என்று ராதாரவி புலம்புகிறான். ஆனால் பாண்டியனோ கூச்சம், பயமின்றி இன்றும் படப்பிடிப்பில் கலந்து கொண்டுதான் திரிகிறான். இந்த அயோக்கியனுக்கு ஆதரவாக நடிகர்கள் சந்திர சேகர், கார்த்திக் போன்ற பொறுக்கிகள் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

தமிழ், தமிழ்ப்பற்று, தமிழ் உணர்வு, தமிழ் இனம் ஆகியவற்றைக் காட்டி சினிமாக்காரன்களும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு கிரிமினல் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஒரு பாரம்பரியம் உண்டு. பிரபலமான இந்து நேசன் என்கிற ஆபாச சினிமா பத்திரிக்கையாளன் லட்சுமி காந்தன் கொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தியாகராஜ பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் ஆயுள் தண்டனை அடைந்தனர். அப்போது ஓட்டுப் பொறுக்கிகள் இதே கூப்பாட்டைக் கிளப்பி அவர்களை விடுதலை செய்ய வைத்தனர். திராவிடக் கட்சிகள் தாம் இந்த இழி செயலுக்குத் தலைமையேற்றன.

இதுவரை தமது பிழைப்புக்குத்தான் தமிழ், தமிழ் உணர்வு, தமிழ்ப்பற்று, தமிழ் இனம் என்றெல்லாம் பேசித் திரிந்த இந்தப் பொறுக்கிகள் இப்போது தமது காம வெறிக்கும் அவற்றைக் கேடாகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் உடம்பில் தமிழ் ரத்தம் ஓடவில்லை; சாக்கடை தான் ஓடுகிறது. எனவேதான் நச்சுப்புகை கக்குகிறார்கள். தமிழன் என்ப் பிறந்துவிட்ட அத்தனை பேரும் குற்றமற்ற யோக்கியர்களா? அன்றாடச் செய்தித்தாள்களிலே நாம் பார்க்கும் பல கற்பழிப்புகளைச் செய்பவர்கள் தமிழர்கள் இல்லையா? காம வெறி - மிருகத்தனத்திற்கு மொழி இனம் ஆகிய பாகுபாடு உண்டா?

மலையாளி, துணை நடிகை என்றாலே விபச்சாரிதான் என்கிறார்கள். விபச்சாரியானாலும் அவளது விருப்பத்துக்கு விரோதமாகக் கற்பழிப்பது தான் தமிழர் நீதி-பண்பாடா? இது வெறும் அவதூறு, 'பிளாக்மெயில்' செய்யும் முயற்சி என்கிறார்கள். அப்படியே ஆனாலும் புகார் கொடுக்கப்பட்டால் வழக்கே பதிவு செய்யக் கூடாது, விசாரிக்கவே கூடாது என்று நிர்ப்பந்தம் செய்கிறார்களே அது எந்த நீதி? புகாரை மறுத்து குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க வேண்டியதுதானே முறை? அதை எதிர்கொள்ளாமல் ஆரம்பத்திலேயே வழக்கை அமுக்கி, தண்டனையின்றித் தப்பிவிடத் துடிக்கிறார்கள் சினிமா பொறுக்கிகள்.

பாட்டாளிகள் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ''ஜன சக்தி'' பத்திரிக்கை பின்வருமாறு தலையங்கம் எழுதுகிறது.'' நாட்டிய நடிகை சுதாவும், திரைப்பட தொழிலில் உள்ளவர். நடிகர் பாண்டியனும் அதே தொழிலில் உள்ளவர். இருவரையும் அழைத்துப் பேசி நான்கு சுவர்களுக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயத்தை தெருவில் ஊர்வலம் கூட்டி தங்களது அந்தரங்கங்களை அம்பலப்படுத்திக் கொள்ள வேண்டுமா?'' (ஜன சக்தி, மே 25). ஒரு பெண்ணை ஒரு காம வெறிக்கும்பல் கற்பழித்துள்ளது. அவர்கள் ஒரே தொழிலில் உள்ளவர்கள் என்பதால் இரு சாராரையும் அழைத்துப் பேசித் தீர்க்க வேண்டும்; அது அவர்களுக்கிடையிலான அந்தரங்கங்கள். அம்பலத்துக்குக் கொண்டு வரக் கூடாது - இது தான் போலிக் கம்யூனிஸ்டுகள் கூறும் நீதி! தொழிற்சங்கத் தரகு வேலையை விட்டுவிட்டு இவர்கள் விபச்சாரத் தரகு வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்! வெட்கங்கெட்டதுகள்!

போலிக் கம்யூனிஸ்டுகள் விரும்புவதைப் போலத்தான் சினிமா ஒரு 'ரகசிய உலகமாக உள்ளது. விபச்சாரம், கள்ளப்பணம், கருப்புப் பணம், நிர்வாணப்படம், கற்பழிப்பு இன்னும் ஏராளமான சமூக விரோதக் குற்றங்களின் இருண்ட உலகமாக இருக்கிறது. இந்தக் குற்றங்கள் எதையும் கண்டு கொள்ளக் கூடாது என்று ஓட்டுமொத்த உரிமை கோருகிறார்கள் சினிமாப் பொறுக்கிகள். அதற்கு ஒத்தூதுகிறார்கள் ஓட்டுப் பொறுக்கிகள்.

துணை-நடன நடிகை சுதா



பிரபலமான சினிமாக்காரன்களது பிரச்சாரமும், கருப்புப் பணமும், பிரபலமான நடிகைகளின் விபச்சார சுகமும் ஓட்டுப் பொறுக்கிகளுக்கு அவசியமாக இருக்கிறது. அதேபோல தமது கருப்புப் பணத்தைப் பதுக்கி வைத்துக் கொள்ளவும் அயோக்கியத்தனங்களை மூடி மறைக்கவும் சினிமாக்காரன்களுக்கு ஓட்டுப் பொறுக்கிகளின் ஆதரவு தேவையாய் இருக்கிறது. இந்த இரண்டு பிரிவினரோடும் கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிக்கவும் விபச்சாரம் செய்யவும் போலீஸ்காரன்கள் அலைகிறார்கள். பத்திரிக்கை முதலாளிகளும் இந்த சமூக விரோதக் கும்பலுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து ஆதாயம் அடைகின்றனர். இப்படிப்பட்டதொரு கிருமினல் கூட்டு இந்தக் கற்பழிப்பு விவகாரத்தில் மீண்டும் உறுதியாகி இருக்கிறது.

-பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுப் பொறுக்கிகள் உருவாக்கிய மதக்கலவரம்

ஓட்டுப் பொறுக்கிகளுக்கு வகுப்புக் கலவரம் ஒரு துருப்புச் சீட்டு. தமது குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக திட்டமிட்டே கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவது அவர்களது வாடிக்கை. அதிலும் ஒவ்வொரு ஆண்டும் ரம்ஜான் ஈத் பண்டிகையின் போது, இந்து - முஸ்லிம் கலவரம் நிகழாத வரலாறே இல்லை. 1980-ல் மொராதாபாத், 84ல் பம்பாய்-பிவாண்டி, 85ல் அகமதாபாத், 87ல் மீரட் என்று பட்டியல்கள் நீளுகின்றன. மீண்டும் இவ்வாண்டு ரம்ஜான் பண்டிகையிலிருந்து ஔரங்காபாத்தில் இந்து - முஸ்லிம் கலவரம் தலைவிரித்தாடுகிறது.

ஔரங்காபாத். மராட்டிய மாநிலத்தில் முஸ்லிம்கள் நூறாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்த பூமி. தலைமுறை தலைமுறையாக காங்கிரசுக் கட்சி செல்வாக்கு செலுத்தி வரும் பகுதி. சிறுபான்மையினரின் நண்பனாக நடித்து ஏய்க்கும் காங்கிரசுக்கு முஸ்லீம்கள் ஓட்டு வங்கியாகத் திகழ்ந்தார்கள். தோற்றுப் போன காங்கிரசுக் கட்சியினர் மீண்டும் ஔரங்காபாத்தில் நின்று வெற்றி பெற்று மந்திரிகளான நிகழ்ச்சிகள் ஏராளம். அந்த அளவுக்கு காங்கிரசின் மீது குருட்டு நம்பிக்கை வைத்து கண்ணை மூடிக்கொண்டு வாக்களிக்கும் முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதி.

ஆனால் '70களின் துவக்கத்திலிருந்து இந்த நிலைமை மாறத் தொடங்கியது. பின்தங்கிய பகுதிகளில் தொழிலை முன்னேற்ற மராட்டிய அரசு அளித்த சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு மராட்டிய தொழிலதிபர்கள் ஔரங்காபாத்திற்குப் படையெடுத்தனர். அதைத் தொடர்ந்து ஒரு தலைமுறைக்கு முன் ஏறத்தாழ ஒரு லட்சமாக இருந்த மக்கட்தொகை ஔரங்காபாத்தில் இன்று ஐந்து லட்சமாக உயர்ந்துள்ளது. படிப்படியாக மொத்த மக்கட்தொகையில் முஸ்லிம்களின் விகிதம் குறைந்தது. அதே சமயம் தாழ்த்தப்பட்ட, சாதி இந்து தொழிலாளிகளின் விகிதம் அதிகரித்துக் கொண்டே போனது. ஒரு தலைமுறைக்கு முன் மொத்த மக்கட் தொகையில் 90% ஆக இருந்த முஸ்லிம்கள் இன்று 35% ஆகவும், தாழ்த்தப்பட்டோர் 30% ஆகவும், எஞ்சிய 35% மராத்தா சாதி இந்துக்களாகவும் உள்ளனர்.

கடந்த ஏப்ரலில் ஔரங்காபாத் முனிசிபல் கார்ப்பரேஷன் தேர்தல் வந்ததும் காங்கிரசுக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. வழக்கம் போலவே காங்கிரசு கட்சிக்குள் குடுமிபிடி சண்டை. முன்னாள் முதல்வர் சரத்பாவர் ஒரு கோஷ்டியாகவும், இந்நாள் முதல்வர் சவாண், வசந்த் தாதா பாட்டீல் ஒரு கோஷ்டியாகவும் நின்று காலை வாரிக் கொண்டனர். இதைக் கூட எப்படியாவது சரிக்கட்டி விடலாம். ஆனால்பம்பாய் மாநகராட்சித் தேர்தலில் வென்று, இப்போது ஔரங்காபாத்தில் இந்துக்களை தம்பக்கம் அணிதிரட்டிக் கொண்டு காங்கிரசுக்குச் சவாலாக நிற்கும் இந்து வெறி அமைப்பான சிவசேனையை எப்படி தோற்கடிப்பது என்பதுதான் காங்கிரசுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

காங்கிரசு அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட்டது. சிவசேனையோ இந்துக்கள் அதிகமாக வாழும் 48 தொகுதிகளில் நின்றது. பாரதீய ஜனதா கட்சி 42 இடங்களிலும், காங்கிரஸ் (எஸ்) கட்சி 31 இடங்களிலும், முஸ்லிம் லீக் 24 தொகுதிகளிலும் தலித்சிறுத்தைகளும், குடியரசுக்கட்சியும் தலா 22 இடங்களிலும் போட்டியிட்டன.

தேர்தல் நெருங்க நெருங்க சாதி - மதவெறி கக்கும் பிரச்சாரங்களும் சூடு பிடிக்க ஆரம்பித்தன. குறிப்பாக சிவசேனையின் பிரச்சார உத்திகள் பிறவி ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளையே மிரள வைத்தது. குறிப்பாக மராத்தா சாதி இந்து இளைஞர்கள் சிவசேனையின் பிரச்சாரப் பொக்கிஷங்களாக இருந்தனர். அதிகாலையில் ஒவ்வொரு இந்து வீட்டுக்கும் சென்று கதவைத் தட்டி, அவர்கள் திறந்ததும் தடாலென காலில் விழுந்து 'இந்துக்களின் நலன் காக்க சிவசேனைக்கே வாக்களியுங்கள்' என்று இளைஞர்கள் தீவிரமாக ஓட்டுப் பொறுக்கினர். 'முஸ்லிம்கள் ஒரே கட்சியில் ஒற்றுமையாக அணி திரளுகிறார்கள். இந்துவே, நீ உன் மதத்தைக் காக்க சிவசேனையில் அணிதிரள்!' இந்துக்கள் என்று சொல்வதில் பெருமை கொள்! முஸ்லிம்கள் அன்னியர்கள். இந்துக்கள் வாழும் பூமியில் அவர்களை ஆளவிடுவது அவமானம்! ஜெய் பவானி! ஜெய் சிவாஜி! என்ற கோஷங்களுடன் புலிக்கொடி ஏந்தி சிவசேனை வெறியூட்டும் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. அதுமட்டுமல்ல. தேர்தலில் வெற்றி பெற்றால், 'ஔரங்காபாத்' என்ற பெயரை நீக்கிவிட்டு, முஸ்லிம்களுக்கு எதிராகப் போராடிய மராட்டிய மன்னன் சிவாஜியின் மகனின் நினைவாக 'சம்பாஜிபுரம்' என்று நகருக்குப் புதுப் பெயர் மாற்றம் செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தனர். சிவசேனையின் மதவெறிப் போதைக்குப் பலியான மக்கள் இந்துமதவெறிக் கட்சியான பாரதிய ஜனதாவைக் கூட ஆதரிக்கத் தயாராக இல்லை.

பிரச்சாரம் தீவிரமாக தொடங்கியதும் காங்கிரசும் அரண்டுப் போனது.. இந்துக்களும் சிவசேனையின் புலிக் கொடியின் பின்னே அணிதிரண்டு நிற்கிறார்கள். சிறுபான்மையினரான முஸ்லிம்களோ காங்கிரசா, முஸ்லிம் லீக்கா - எதற்கு வாக்களிப்பார்கள் என்று புரியாமல் மதில்மேல் பூனையாக நிற்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருபிரிவினர் சிவசேனைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்பதும் உறுதியாகி விட்டது. இந்த நிலைமை நீடித்தால் காங்கிரசு தோற்பது நிச்சயம். சிவசேனை வெற்றிப் பெற்று விட்டால், காங்கிரசுக்கு அவமானம் மட்டுமல்ல; ஏற்கனவே பம்பாய் மாநகராட்சியைக் கைபற்றிய சிவசேனை, இப்போது ஔரங்காபாத்தையும் கைப்பற்றி விட்டால் அதை சாதகமாக்கி கொண்டு மரத்வாடா பிராந்தியம் முழுக்க விரிவடைந்து விடும். அதன் பிறகு காங்கிரசு செல்லாக் காசு ஆகிவிடும். எனவே எப்பாடு பட்டேனும் சிவசேனையைத் தோற்கடிக்க வேண்டும். என்ன செய்வது? வகுப்புக் கலவரத்தைத் தூண்டுவதுதான் ஒரே வழி!

இந்து முஸ்லிம் கலவரத்தைத் தூண்டுவது அதன் மூலம் சிறுபான்மையினரான முஸ்லிம் மக்களை பயப்பீதியில்

ஓட்டுப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடும் சிவசேனா ரௌடிகள்; தலைவர் பால் தாக்கரே.





படிப்பகம்

www.padippakam.com

ஆழ்த்துவது, அவர்களது பாதுகாவலானாக காட்டிக் கொண்டு ஓட்டுக்களைப் பறிப்பது என்ற காங்கிரசின் கொலைக்காரத் திட்டம் முடுக்கி விடப்பட்டது. திட்டமிட்டபடி ஒரு முஸ்லிமும், ஒரு தாழ்த்தப் பட்டவரும் இந்துக்கள் நிறைந்த பகுதியில் கத்தியால் குத்தப்பட்டனர். சிவசேனையினர் சாதி - மதவெறி பிடித்து தாக்கியதாக காங்கிரசு கதை கட்டியது. அதைத் தொடர்ந்து இந்து - முஸ்லிம், சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டோர் மோதல்கள் காட்டுத்தீயாக பரவத் தொடங்கியது. ஔரங்காபாத் மக்கள் தேர்தல் நாளன்று வாக்களிக்கச் சென்ற அதே நேரத்தில் 6க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். 32க்கும் மேற்பட்டோர் குற்றுயிரும் குலையுயிருமாக மருத்துவமனையில் கிடந்தனர்.

கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டும் கூட காங்கிரசு கயவாளிகளால் வெற்றி பெற முடியவில்லை. 60 தொகுதிகளில் 17 இடங்களையே அவர்களால் கைப்பற்ற முடிந்தது. சிவசேனை வெகு சுலமாக 27 இடங்களில் வென்று முன்னணியில் நின்றது. மறுபுறம், சிவசேனை அமோக வெற்றி வெற்றி பெற்றிருந்தாலும் அறுதிப் பெரும்பான்மையாக இல்லை. எனவே மே 6ல் நடைபெறவுள்ள மேயர் தேர்தலில் எப்படியும் வெற்றி பெறுவதற்காக சிவசேனையும் காங்கிரசும் மற்ற கட்சிகளுடன் பேரத்தில் இறங்கின.

முஸ்லிம் லீகினர் சிவ சேனையை ஆதரிரிக்கப் போவதில்லை. சுயேட்சைகளில் இருவர் காங்கிரசு ஆதரவு பெற்றவர்கள். எனவே 6 இடங்களில் வெற்றி பெற்றுள்ள தலித் மற்றும் குடியரசுக் கட்சியினரை வளைத்துப் போட்டால்தான் மேயர் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற குறியோடு காங்கிரசும் சிவ சேனையும் தாழ்த்தப்பட்டோரின் தலைவரான பிரகாஷ் அம்பேத்காருடன் (அம்பேத்காரின் மகன்) பேரத்தில் இறங்கின.

'மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்காரின் பெயரைச் சூட்டுகிறோம். மேயர் தேர்தலில் எங்களுக்கே வாக்களியுங்கள்' என்று சிவசேனை பேரம் நடத்தியது. இதில் வேடிக்கை என்ன. வென்றால் ஒரு தலைமுறைக்கு முன்னர்தான் மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு ஆளும் காங்கிரசார் அம்பேத்கார் பெயரைச் சூட்ட முற்பட்ட போது சிவசேனையினர் தாழத்தப்பட்டோருக்கு எதிராகக் கலவரத்தில் இறங்கினர்.

மறுபுறம் காங்கிரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு ரூ 4 லட்சம் தருவதாகவும், ஔரங்கா பாத் நகராட்சிக் கமிட்டியில் நிரந்தர உறுப்பினர் பதவி தருவதாகவும், எதிர்காலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் விரிவடைய உள்ள ஔரங்காபாத் வளர்ச்சி பணிகளில் காண்டிராக்கு மற்றும் பிற வழிகளில் கொள்ளையடிக்க ஏற்பாடு செய்வதாகவும் பிரகாஷ் அம்பேத்காரிடம் பேரம் பேசியது.

கடைசி நிமிடம் வரை 'நடுநிலை' வகிப்பதாக நாடகமாடிய பிரகாஷ் அம்பேத்கார் காங்கிரசுக்கு சோரம் போனார். தாங்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு சுருங்கிவிட்ட எரிச்சலில் சிவசேனையினர் மேயர் தேர்தலின்போது நகராட்சி அலுவலகத்திலேயே கலவரத்தில் இறங்கினர். வாக்குப் பதிவு குறிப்புப் புத்தகம் மராத்திய மொழியில் இருக்க வேண்டும்; அது ஆங்கிலத்தில் உள்ளது. இதை மாற்றா விட்டால் வாக்களிக்க மாட்டோம் என்று கூச்சலிட்டுக் கொண்டு வெளிநடப்பு செய்தனர். கமிஷனர் கூட்டத்தை ஒத்தி வைப்பதாகக் கூறினார். ஆனால் காங்கிரசார் கமிஷனர் விதிகளுக்கு முரணாக நடப்பதாகக் கூறி உடனே தேர்தல் நடத்த நிர்பந்தித்து, சிவசேனை வெளிநடப்பு செய்த நேரத்தில் வாக்குப் பதிவு நடத்தி காங்கிரசு வேட்பாளர் சாந்தாராம் காலே மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தனர்.

ஆத்திரமுற்ற சிவ சேனையினர் இம்மோசடித் தேர்தலை எதிர்த்து வழக்கு தொடுத்தனர். வழக்கு மன்றத்திற்கு அருகே உள்ள முஸ்லிம்கைள் நிறைந்த பகுதியில் புகுந்து கண்ணில் பட்டவர்களை வெறி கொண்டு தாக்கினர். மறுபுறம் காங்கிரசு-முஸ்லிம் லீக்-தலித் கட்சியினர் கூட்டுச் சேர்ந்த கொண்டு 'சிவசேனை வரும் முன்னே, கலவரம் வரும் பின்னே!' என்பதை மக்கள் உணர வேண்டும் என்பதற்காகவே கலவரத்தை காட்டுத் தீயாகப் பரவச் செய்தனர். காங்கிரசு எம்.எல்.ஏ அமானுல்லா மோடிவல்லா தானே முன்னின்று இதைச் செய்துள்ளார்.

ஔரங்காபாத் நகரில் தொடங்கிய கலவரம் மராத்வாடா பிராந்தியம் முழுவதும் குக்கிராமங்கள் வரை பற்றி எரிந்தது. பித்கில் கிராமத்தில் முஸ்லிம் குடியிருப்புகளுக்கும் கடைகளுக்கும் சிவசேனையினர் தீ வைத்துக் கொளுத்தினர். பைத்தான் நகரில் 6 பேர் கொல்லப்பட்டனர். கத்திக்குத்து, கல்வெறி, தீ வைப்பு, சூறையாடல் என்று மதவெறி தலைவிரித்தாடியது. ஊரடங்கு உத்தரவு கண்டதும் சுட ஆணை என்று போலீசு மிரட்டியும் கூட கட்டுப்படுத்த முடிய வில்லை. பைத்தான் நகருக்கு அருகே ஒரு முஸ்லிம் உயிரோடு கொளுத்தப்பட்டார். ''எனது கணவரை உயிரோடு கொளுத்தியவர்களை நான் நன்கறிவேன். நேற்றுவரை நாங்கள் சகோதரர்களைப் போல நேசத்தோடு பழகி வந்தோம். இன்று திடீரென அவர்கள் வெறிபிடித்துப் போனதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை'' என்று வேதனையோடு கூறுகிறார் தன் கணவனைப் பறிகொடுத்த இளம்பெண்.

அரசுத் தகவல்படி இதுவரை 26 பேரின் உயிரைக் குடித்து. 200க்கும் மேற்பட்டவர்களைப் படுகாயப்படுத்தி, பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை நாசப்படுத்திவிட்டு இப்போது கலவரம் சற்றே ஓய்ந்துள்ளது.

நாட்டின் எங்கோ ஒரு மூலையில் மதக் கலவரம் நடந்தால் எனக்கென்ன வந்தது என்று உழைக்கும் மக்கள், குறிப்பாக தமிழக மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது. வரப்போகும் தேர்தலை ஒட்டி சாதிச் சங்கங்கள் விடுக்கும் மிரட்டல்கள், ஓட்டுக் கட்சிகள் அவர்களுடன் நடத்தும் பேரங்கள், சாதிக் கலவரத்தைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த அவர்கள் போடும் சதித் திட்டங்கள் முதலான அனைத்தும் இன்னுமொரு ஔரங்காபாத் இங்கே உருவாவதற்கான அபாயம் நிலவுவதை தெளிவாகவே சுட்டிக் காட்டுகின்றன; உழைக்கும் மக்களும் புரட்சியாளர்களும் விழிப்போடிருந்து சாதி சங்கங்களின் - ஓட்டுக் கட்சிகளின் எத்தணிப்புகளை முறியடிக்க வேண்டிய அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகின்றன.

— மனோகரன்.

**வெற்றிக் களிப்பில் ஓட்டுப் பொறுக்கி! வேதனையில் உழைக்கும் மக்கள்!**





படிப்பகம்

www.padippakam.com

# அமைப்புச் செய்தி:



## புரட்சிகர அரசியலுக்கு உழைக்கும் மக்களின் உற்சாக வரவேற்பு!

மதுரை மாவட்டம் - உத்தமபாளையம் வட்டத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் மற்றும் அமைப்பின் கொள்கை விளக்க பிரச்சாரத்தையும் நடத்தி வருகிறோம். தெருமுனைக் கூட்டங்கள் மூலம் ஓட்டு சீட்டு அரசியல் கட்சிகளை தோலுரித்தும், அதிகார வர்க்கம், போலீசு, ராணுவம், கோர்ட், சிறைச்சாலை அனைத்தும் நிலப்பிரபுத்துவ, தரகு அதிகார வர்க்க, ஏகாதிபத்தியங்களை பாதுகாப்பதற்கும், உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்காகவும் தான் உள்ளது என்பதையும் அம்பலப்படுத்தினோம். தேர்தல் மூலமாக உழைக்கும் மக்களுக்கு எந்த ஒரு உரிமையும் கிடைக்கப் போவதில்லை. சாதி, மத, இன வேறுபாடு இன்றி அனைத்து உழைக்கும் மக்களும் ஒன்று திரண்டு ஒரு ஆயுதம் தாங்கிய புதிய ஜனநாயக புரட்சியின் மூலம் மட்டுமே நமக்கான அரசை படைக்க முடியும் என்றும் விளக்கினோம்.

நாங்கள் பிரச்சாரம் நடத்திய எல்லா குக்கிராமங்களிலும் உள்ள உழைக்கும் மக்கள் ஆர்வத்தோடு நிகழ்ச்சிகளை கண்டு ஆதரவளித்தனர். இன்னும் சிலர் வியப்பு மேலிட ''குடும்பம் குடும்பமாக, குழந்தை குட்டியோடு வந்து இப்படியெல்லாம் சொல்லுகிறீர்களே இதனால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது'' என்று ஆச்சரியத்தோடு கேட்டனர். நாங்கள் விளக்கம் கொடுத்த பின்பு ''எல்லாம் நல்ல கொள்கைதான், ஆனால் எவன் திருந்தி வரப் போறான்'' என்று தங்கள் ஏக்கத்தை வெளிப்படுத்தினாலும், நிகழ்ச்சியின் கடைசிவரை இருந்து கவனித்ததோடு பல்வேறு கேள்விகள் கேட்டு புரட்சிகர அரசியலின் பால் தங்களுக்கு இருக்கும் உற்சாகத்தையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

தே.மேட்டுப்பட்டி, மல்லிங்காபுரம், செல்லையாபுரம், தேவாரம், கோம்பைரங்கநாதபுரம் போன்ற பல்வேறு கிராமங்களில் பெரும்பான்யான உழைக்கும் மக்கள் பெருந்திரளாக குழுமியிருந்து நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கேட்டார்கள். எங்களுடன் பிரச்சாரத்திற்கு வந்திருந்த இரண்டு குட்டி தோழர்களின் (அவர்களில் பெண் தோழருக்கு வயது 9, ஆண் தோழருக்கு வயது 10) கலை நிகழ்ச்சிகளையும் அவர்களையும் மிகவும் வரவேற்று உபசரித்தனர். கிராமங்களில் நடந்த கூட்டங்களில் உழைக்கும் பெண்கள் அதிகமாக குழுமியிருந்தனர் நிகழ்ச்சியின் முடிவுவரை இருந்து பிரச்சாரத்தை அக்கறையுடன் கூர்ந்து கவனித்தனர். தோழர்களுக்கு டீ, கலர், சோடா, வாழைப்பழம் என பசியார வாங்கி கொடுத்து உபசரித்தனர். இக் குக்கிராமங்களில், வறுமையில் அல்லாடும் உழைக்கும் மக்கள் மனமுவந்து 5 காசு, 10 காசு என ரூ 84.20 அமைப்பின் வளர்ச்சி நிதிக்காக வழங்கினார்கள்.

மல்லிங்காபுரத்தில், நடந்த தெருமுனைக் கூட்டத்தில் நடந்த கலைநிகழ்ச்சியில் வரதட்சனைக் கொடுமையால் பெண்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்று பாடிய போது நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்த உழைக்கும் குடும்பத்தை சார்ந்த ஒரு இளம் பெண் உணர்சி மேலிட கண்ணீர் விட்டு அழுதார். இவர் அமைப்பு வளர்ச்சிக்காக தன் முந்தி சேலையில் இருந்த ஒரு ரூபாயை அப்படியே எடுத்து கொடுத்துவிட்டார். இன்னொரு உழைப்பாளி பெண் ''நம் உழைப்பைப் பற்றி எடுத்து சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்க்காமல் சினிமா, சினிமா என்று எல்லோரும் ஓடிப்போய் விடுகிறார்களே'' என்று தம் மக்களின் அறியாமையை எண்ணி வேதனைப் பட்டார். இன்னொருவர் ''உங்கள் பாடல்களை 'கேஸட்டில்' பதிய வேண்டும். அதற்கு எவ்வளவு செலவு ஆனாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். 'கேஸட்டை' எல்லாக் கடைகளிலும் போடச் சொல்கிறேன்' என்று ஊக்கம் கொடுத்தார்.

செல்லையாபுரத்தில், போலிக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஒருவர்,, ''இவனுகளெல்லாம் கொள்ளை அடிப்பானுக, கொலை செய்வானுக. இவன்களுக்கு அமெரிக்காவிலிருந்து காசு வருது. நாங்கள் தேர்தலில் நின்னு ஜெயிப்பதை இவனுகதான் கெடுக்கிறானுக'' என்று தன் தலைமை சொல்லிக் கொடுத்ததை கூட்டத்தின் நடுவே அப்படியே வாந்தி எடுத்து, அக்கிராம மக்களிடம் வகையாக சிக்கிக் கொண்டார். போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் சாயத்தை உழைக்கும் மக்களே நன்றாக வெளுக்கடித்தார்கள்.

புரட்சிகர அரசியலுக்கும், அமைப்புக்கும் உழைக்கும் மக்கள் கொடுத்த மகத்தான வரவேற்பால் நாங்கள் புது உற்சாகத்துடன் மேலும் உத்வேகத்துடன் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றோம்.

இவண்,
விவசாயிகள் விடுதலை முன்னணி
உத்தமபாளையம் வட்ட பிரச்சாரக் குழு

---

வெளிவந்துவிட்டது

'சுசி (SUCI)
இரவல கம்யூனிசப் போர்வையில்
இன்னுமொரு
குட்டி முதலாளித்துவ கும்பல்'

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இண்டியா (SUCI) என்ற பெயரில் உலா வரும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முகவிலாசத்தை அரசியல்-சித்தாந்த ரீதியாக அம்பலப்படுத்திக் காட்டும் நூல்.

இது ஒரு 'புதிய ஜனநாயகம்' வெளியீடு!

விலை ரூ 2. தபால் செலவு ரூ 1

நூல் வேண்டுவோர் பின்வரும் முகவரியுடன்
தொடர்பு கொள்க.
எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜி சிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015.

---

ஏப்ரல் மாதம் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு விஜயம் செய்த ராஜீவின் பாதுகாப்பைகாரணம் காட்டி, தமிழ்நாடு முழுவதும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர். இக் கைதை கண்டித்தும், தேசதுரோக ராஜீவ் காங்கிரசு கும்பலை அம்பலப் படுத்தியும் தஞ்சை - காவேரி சிறப்பங்காடி அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. யார் தேசபக்தர்கள், யார் தேசவிரோதிகள் என்பதை விளக்கும் முழக்கங்களுடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு தஞ்சை மகஇக தோழர் அறிவழகன் தலைமை தாங்கினார். திருவோணம் - விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் துரைமாணிக்கம், யார் தேசபக்தர்கள் என்பதை விளக்கியும், காங்கிரசு கும்பலின் தேசதுரோகத்தை அம்பலப்படுத்தியும் சிறப்புரையாற்றினார். திருவையாறு வி.வி.மு. தோழர் ஜெயசீலன் 59வது அரசியல் சட்டத்திருத்தத்தின் பாசிசத் தன்மையை விளக்கினார். மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தஞ்சை கிளை செயலர், தோழர் காளியப்பன் புரட்சிகர அமைப்பைச் சார்ந்த தோழர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், உழைக்கும் மக்கள் புரட்சிகர இயக்கங்களில் அணி திரள வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார். கூட்டம் சிறப்பான வரவேற்பை பெற்றது.

இவண்
மக்கள் கலை இலக்கியக்கழகம்
தஞ்சை கிளை.



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிகளின் புதிய தாக்குதல்!

எட்டாண்டுகளுக்குப் பிறகு, ஆங்காங்கே தொழிலாளர் போராட்டங்கள் தலைதூக்குகின்றன. நம்பிக்கையூட்டும் இந்த மாற்றத்துக்கு என்ன காரணம்?

முதலாளிகள் தொடுத்திருக்கும் புதிய தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைப்பதற்கே போராட வேண்டிய நிர்பந்தத்தில் தொழிலாளர் இயக்கம் சிக்கிக் கொண்டுள்ளது. எனவேதான் ஆங்காங்கே தொழிலாளர் போராட்டங்கள் தலைதூக்குகின்றன.

சென்னை ஓட்டல் தொழிலாளர் போராட்டம் பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தோம். அதிலே சாந்தி விகார் முதலாளி, தொழிலாளிகளிடம் முன்வைத்த இரண்டு கோரிக்கைகளை ''சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும், சப்ளையர்கள் வாங்கும் ''டிப்சி''லும் (இனாமிலும்) பங்கு வேண்டும்'' என்று கோருவதாக - குறிப்பிட்டிருந்தோம்.

இது ஏதோ சாந்தி விகார் ஓட்டல் முதலாளியின் அற்பத்தனம் என்று யாரும் கருதிவிட வேண்டாம். இதே மாதிரியான நிர்பந்தங்களை இன்று பல ஏகபோக, தரகு அதிகாரமுதலாளிகள், பன்னாட்டு பகாசரக் கம்பெனிகள் ஏற்படுத்துகின்றன. தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் முன்பே, முதலாளிகள் தமது நிபந்தனைகளை முன்வைத்து நிர்பந்திக்கிறார்கள்.

சென்னையிலும், கல்கத்தாவிலும் உள்ளது ''மெட்டல் பாக்ஸ்'' என்ற ஒரு ஏகபோகத் தொழில் நிறுவனம். இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்காவுடன் நெருங்கிய உறவுடைய 'கைத்தான்' குடும்பத்தினரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இது ஒரு நசிவுற்ற ஆலை; எனவே தொழிலாளிகளைக் குறைத்துக் கொள்ளவும் கோரி நிர்பந்திக்கிறது நிர்வாகம். இல்லையானால் கதவடைப்பு செய்கிறது.

கல்கத்தாவில் உள்ளது இந்தியா கிராமஃபோன் கம்பெனி. வேலைப் பளுவைக் கூட்டி உற்பத்தித் திறனை உயர்த்தவும், மூன்றாண்டுகளுக்கு சம்பள உயர்வை வெட்டி விடவும், ஐந்து நிமிடத்துக்கு மேல் தாமதமாக வரும் தொழிலாளிகளுக்கு வேலை மறுக்கவும் சம்மதிக்கும்படி தொழிற்சங்கங்களை நிர்வாகம் நிர்பந்திக்கிறது.

புதுடெல்லிக்குத் தெற்கே, அரியானாவில் உள்ள புறநகர் - தொழில் நகரம் ஃபரிதாபாத். அங்குள்ளது 'ஐவர்' டிராக்டர் கம்பெனி. தொழிலாளி பற்றாக்குறையை ஈடு செய்து வந்த கூடுதல் நேர (OVER TIME) - வேலையை அந்தக் கம்பெனி அடியோடு நிறுத்திவிட்டது. உற்பத்தித் திறனை ஒட்டி சம்பளத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யும் ஒப்பந்தம் ஒன்றைத் தொழிற்சங்கங்களுடன் போட்டுக் கொண்டு விட்டது. பிற உற்பத்தி இடங்களில் சம்பள வெட்டு செய்வதற்கான பேச்சு வார்த்தைகள் நடத்துகிறது.

பம்பாயிலும், சென்னையிலும் உள்ள பிரிட்டானியா தொழிற்சாலைகள் பத்து சதவிகித அளவு உற்பத்தியை அதிகரிக்கும் அளவுக்கு வேலைப்பளுவைக் கூட்டிக் கொள்ளும்படி தொழிற்சங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளது.

டன்லப் இந்தியா நிர்வாகம், சட்டபூர்வமான போனசு முறையை ஒழித்துவிட்டு, உற்பத்தித் திறனுடன் போனசைப் பிணைக்கும்படியான ஒப்பந்தம் போட்டுள்ளது. அதே போல சென்னை வெல்கம் குரூப்புக்குச் சொந்தமான சோழா - ஷேராட்டான் என்கிற ஐந்து நட்சத்திர ஓட்டலிலும் லாப அடிப்படையோடு போனசு பிணைக்கப் பட்டுள்ளது. பம்பாயில் உள்ள ''விம்கோ'' தீப்பெட்டித் தொழிற்சாலையில் உற்பத்திக்கேற்ப ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்குக் கூட தீப்பெட்டிகளின் அளவை மாற்றிய போதும் ஊதிய உயர்வுதர மறுத்து விட்டது.

சென்னையில் உள்ள என்ஃபீல்டு இந்தியா மோட்டார் சைக்கிள் கம்பெனி சென்ற ஆண்டு 170 பயிற்சித் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கியது. இரண்டு ஆண்டுகள் மூடிகிடந்த பின்னி என்ஜினியரிங் ஆலை நிர்வாகத்தை சாராய ராமசாமி உடையார் கைப்பற்றிய போது ஊதிய - போனசு முடக்கம், வேலைப்பளு ஏற்றம் போன்ற பல நிபந்தனைகளை விதித்து தனித்தனியே தொழிலாளியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார். நிர்வாகத்தைச் சீர்திருத்தி நவீன மயப்படுத்துவதாகச் சொல்லி கொண்டு அரசுத்துறை ஆலைகளில் இருந்து பலர் வெளியேற்றப்படுகின்றனர். குறிப்பாக இந்திய எஃகு ஆணையகத்திலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் பல ஆயிரம் தொழிலாளர் வெளியேற்றப்பட்டுள்ளனர். பணத்தாசை காட்டி ''தானே முன்வந்து ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ்'' பலரது வேலை பறிக்கப்படுகிறது.




படிப்பகம்

www.padippakam.com

இவை தனித்தனி நிர்வாக நடவடிக்கைகள் அல்ல. சம்பள உயர்வில் வெட்டு, வேலைப்பளுவைக் கூட்டி உற்பத்தித் திறனை அதிகரிப்பது, கிராக்கிப்படிகளுக்கு உச்சவரம்பு, ஊதியம் - போனசை உற்பத்தியோடு இணைப்பது, ஆட்குறைப்பு, சிக்கன சீரமைப்பு ஆகிய இந்த நடவடிக்கைகள் தொழிலாளர்கள் மீது முதலாளிகள் தொடுத்துள்ள புதிய தாக்குதல்கள்.

முன்பு, ஊதிய உயர்வு - போனசு பற்றிய கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தால், வேலைப்பளு - உற்பத்தித்திறன் உயர்வு, ஆட்குறைப்பு - சிக்கனச் சீரமைப்பு பற்றிய நிபந்தனைகளை முதலாளிகள் போடுவார்கள்.

இப்போது, தொழிலாளர்கள் கோரிக்கை எதுவும் முன்வைக்காதிருக்கும் போதே, போராடத் துணியாதிருக்கும் போதே, சம்பள வெட்டு, வேலைப்பளு - உற்பத்தித்திறன், ஆட்குறைப்பு - சிக்கன சீரமைப்பு ஆகியவற்றை ஏற்கும்படி தொழிலாளர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

தொழிற்சங்க ''வீராதிவீரன் - சூராதி சூரன்'' தத்தா சாமந்த் தலைமையிலான பம்பாய் துணி ஆலைத் தொழிலாளர்கள்; தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே நடுநிலை வகிக்கும் ''இடதுசாரி'' ஜனநாயகக் கூட்டணி'' ஆளும் மேற்கு வங்க சணல் ஆலைத் தொழிலாளர்கள்; பெருந்தொகையினரான இந்த இருபிரிவுத் தொழிலாளர்களுமே முதலாளிகள் விதித்த எல்லா நிபந்தனைகளையும் ஏற்று கொத்தடிமைகளாக உழைக்கின்றனர்.

துணி ஆலைகள் மற்றும் சணல் ஆலைகள் ஆகிய இரு பாரம்பரியத் தொழில்களில் மட்டுமல்ல, பலநவீனத் தொழில்களிலும் இதே நிலைமை. முதலாளிகளும், அவர்கள் சார்பாக தலைமை நிர்வாகிகளும் ஒரே குரலில் கூவுகிறார்கள், ''கடந்த காலத்தில் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பற்றி மட்டுமே நாங்கள் பேச்சு - வார்த்தைகள் நடத்தினோம். இப்போது, நாங்கள் அவர்களிடம் எதிர்க் கோரிக்கைகளை வைக்கிறோம். நாங்கள் மூர்க்கத்தனமாக மாறி விடவில்லை. சற்று உறுதியோடு நடத்து கொள்கிறோம்; அவ்வளவுதான்''

தொழிலாளர் மீதான இந்தத் தாக்குதலுக்கு முதலாளிகள் கூறும் காரணம், ''போட்டி அதிகரித்து விட்டது; அடக்க விலையைக் குறைக்க வெண்டும். உழைப்பின் விலை மிகமிக அதிகமாகி விட்டது. நாட்டின் சராசரி தனி மனித வருமானத்தை விட பலபத்து மடங்கு தொழிலாளி பெறுகிறான்'' என்பதாகும்.

ஆனால் உண்மை என்ன? விலைவாசி ஏற்றத்துக்கு ஏற்ப கிராக்கிப்படி தான் பலமடங்கு ஏறிக்கொண்டே போகிறது. அடிப்படை சம்பளம் அப்படியேதான் இருக்கிறது. துணி ஆலைத் தொழிலில் மட்டும் மொத்த சம்பளத்தில் 53 சதவிகிதம் விலையேற்றத்தினால் உயரும் கிராக்கிப் படிக்காகவே தரப்படுகிறது.

பம்பாய் நகரை அடிப்படையாக வைத்து, 10 சதவிகிதப் பணப்பெருக்கம் என்று கணக்கிட்டு 1991 ஆம் ஆண்டு கிராக்கிப்படி பற்றி இந்திய முதலாளிகள் சங்கம் ஒரு ஆய்வு செய்துள்ளது. அதன்படி 1984 இல் 100 ரூபாய் அடிப்படை சம்பளத்துக்கு 1555 ரூபாய் கிராக்கிப்படி வாங்கி வந்த தொழிலாளி 1991 இல் 2705 ரூபாய் பெறுவான். 550 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்றால் கிராக்கிப்படி 5000 ரூபாயைத் தாண்டி விடும். இது யாருடைய குற்றம்? முதலாளிகள் மற்றும் அவர்களுடைய அரசின் குற்றம். ஆனால் இதன் சுமையைத் தொழிலாளர்கள் மீது திணிப்பதற்குத் தான் இந்தத் தாக்குதல் தொடங்கப் பட்டிருக்கிறது.

பிரபலமான கருங்காலித் தொழிற் சங்கம் காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. அதன் மேற்கு வங்கத் தலைவர் சுப்ராட்டா முகர்ஜி, ''முதலாளிகள் இப்போது கோரிக்கைப்பட்டியல் வைக்கிறார்கள். தொழிற்சங்கங்கள் போர்க்குணமடைவதற்குப் பதில், நிர்வாகத்தினர் மேலும் தீவிரமடைகிறார்கள்'' என்கிறார். அதன் பழம் - பெருச்சாளியான அந்தோணி பிள்ளை, ''இப்போது தொழிற்சங்கங்கள் நிலைமைக்கேற்ப மாறுகின்றன.' போனசுக்கும் உற்பத்தித் திறனுக்கும் உள்ள இணைப்பைக் கொள்கை ரீதியிலாவது இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்'' என்கிறார். இப்படி இவர்கள் பணிந்து போவதுதான் தொழிலாளர்களுக்கு ஒரேவழி என்று அப்பட்டமாகவே கூறுகிறார்கள்.

''நவீனப்படுத்துவது, ஆலைகளை மூடிவிட்டு வேறு இடத்துக்குப் போவது என்கிற நிர்வாகத்தின் அதிகரித்து வரும் போக்கு ஆகியனவற்றால் அமைப்பு ரீதியில் திரண்டுள்ள தொழிற்சங்க வாதம் பலவீனமடைகிறது'' என்று புலம்புகிறார் தத்தா சாமந்த்.

இஞ்சி தின்ற குரங்கு போல விழிக்கிறது போலிக் கம்யூனிஸ்டுத் தலைமை. முக்காடு போட்டுக் கொண்டு புறக்கடை வாசல் வழியே போய் முதலாளிகளுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு துரோகம் செய்கிறது. அது ஆட்சியிலுள்ள மேற்கு வங்கத்தில்தான் இந்தத் துரோகத்தைத் துவங்கி வைத்தது. ''சணல் ஆலைத் தொழில் நொடிந்துப் போய் விட்டது; வேறு வழி இல்லை'' என்கிற சமாதானத்தை சொல்லிக் கொண்டு பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழக்கவும், மீதிப் பேர் கொத்தடிமைகளாகவும் காரணமான ஒப்பந்தங்களை முன்னின்று ஏற்றுக் கொண்டது. பிறகு என்ஜினியரிங் தொழில்களுக்கும் அந்தத் துரோகத்தைப் பரப்பியது. இப்போது டன்லப் இந்தியா, மெட்டல் பாக்ஸ், இந்தியா கிராமஃபோன் கம்பெனி என்று பல ஆலைகளுக்கும் பரவி உள்ளது.

தொழிலாளர்கள் மீது இப்படி அப்பட்டமான, துணிச்சலான தாக்குதலை முதலாளிகள் தொடுப்பதற்கு என்ன காரணம்?

முதலாளிகளின் இந்தத் தாக்குதலுக்கு ஆங்காங்கே சில எதிர்ப்புகள் கிளம்பினாலும், தொழிலாளர் இயக்கம் இன்று பலவீனமாயும், அடி பணிந்தும் போவதற்கு என்ன காரணம்?

பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சிக்கு வந்தபிறகு அறிவித்தது, அமுல்படுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய துணிக் கொள்கை, புதிய மருந்துக் கொள்கை, புதிய தொழில் கொள்கை, ஆகிய அனைத்தும் சாயம் வெளுத்துப் பொய் பல்லிளிக்கின்றன. நவீனப் படுத்துவது, தொழில் வளத்தைப்

## திருச்சி ஸ்டீல் ரோலிங் மில்

கொளுத்தும் வெயிலில் வெளியே தலைகாட்டவே மக்கள் அஞ்சும்போது, அனல் பறக்கும் வெப்ப உலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமை கொடூரமானது. அதிலும் எவ்வித பாதுகாப்பு வசதியுமின்றி, திருச்சி ஸ்டீல் ரோலிங் மில் (TSRM) நிறுவனத்தில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி 100 அடி நீளமுள்ள கம்பிகளாகவும் பில்லட்களாகவும் மாற்றும் தொழிலாளர்களின் நிலைமை மிகக் கொடூரமானது. நெருப்புப் பிழம்புகளாகச் சீறிவரும் கம்பிகளில் சிக்கி மாண்டு போன தொழிலாளிகள் ஏராளம். உடலில் தீப்புண் தழும்பில்லாத தொழிலாளிகளைக் காண்பது அபூர்வம்.

தொழிலாளிகளின் அளப்பரிய உழைப்பைச் சுரண்டிக் கொழுத்த இந்நிறுவனத்தின் முதலாளி சங்கரன் இன்று இதுபோல் 6 ஆலைகளை நிறுவி பூதாகரமாக வளர்ந்து விட்டான். இது தவிர பினாமிகள் பெயரிலும் ஏராளமாகச் சொத்துக்களைக் குவித்துள்ளான். ஆனால் இதற்குக் காரணமான இந்நிறுவனத்தின் தொழிலாளிகளோ கொத்தடிமைகளை விடக் கேவலமாக நடத்தப்படுகின்றனர்.

இங்கு சுமார் 1500 பேர் வேலை செய்கிறார்கள். அதில் நிரந்தரத் தொழிலாளிகள் ஏறத்தாழ 500 பேர் தான். எஞ்சிய அனைவரும் நிரந்தர மற்ற தினக்கூலித் தொழிலாளிகள். இவர்களது சம்பளமோ எட்டு ரூபாய் தான். ஆண்டுக் கணக்கில் வேலை செய்தும் கூட இவர்கள் இன்னமும் நிரந்தரம் செய்யப்படவில்லை. இதை



படிப்பகம்

www.padippakam.com



# அடக்குமுறை-சுரண்டலுக்கெதிராய் ஆர்த்தெழும் தொழிலாளர்கள்

எதிர்த்தாலோ, முணுமுணுத்தாலோ சீட்டுக் கிழித்து அனுப்பி விடுவான் முதலாளி. அதோடு முதலாளியின் அடியாட்களான செக்யூரிட்டி காவலர்களிடம் உதை வாங்கவும் நேரிடும். தொழிலாளிகளுக்கு கூலியை கூட்டித் தர மறுக்கும் வக்கிரபுத்தி கொண்ட முதலாளி, ஆலையின் உள்ளே நாய்களை வளர்த்து அதற்கு தினமும் மாமிச உணவும், பிஸ்கெட்டும் பாலும் கொடுக்கிறான். தொழிலாளர்களுக்கு இரவு நேரத்தில் கழுநீர் தண்ணி போல கொடுக்கும் பாலை இந்த நாய்கள் முகர்ந்து கூட பார்க்காது.

இத்தனை அவலங்களுக்கும் அடக்குமுறைக்கும் எதிராக தொழிலாளர்கள் ''திருச்சி ஸ்டீல் ரோலிங் மில் எம்ப்ளாய்ஸ் யூனியன்'' என்ற ஈராண்டுகளுக்கு முன், நூறாவது மே தினத்தில் தொழிலாளிகள் சங்கக் கொடி ஏற்றிய போது போலீசை வைத்து விரட்டி அடியாட்களை வைத்து கொடி மரத்தை வெட்டி எறிந்தான், முதலாளி சங்கரன். அதன்பிறகு, போர்க்குணமிக்க சங்கப் பொதுச் செயலாளர் அருள் தலைமையில் கூலி உயர்வுக்காகவும், தினக்கூலித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யக் கோரியும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். 97 நாட்கள் நடந்த உறுதிமிக்க இப்போராட்டத்தில் தொழிலாளர்கள் அவர்களது குடும்பப் பெண்கள் உட்பட சிறை சென்றனர்.

தொழிலாளர்களின் போராட்டம் உறுதியுடன் முன்னேறிக் கொண்டிருக்க போது திருச்சி எம்.பி.யும் பண முதலையுமான அடைக்கலராஜின் மைத்துனரும், தி.மு.க. எம்.எல்.ஏ.வுமான மலர் மன்னன், முதலாளியிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு போட்டி சங்கத்தைத் தோற்றுவித்தது. கருங்காலிகளை வளர்த்து போராட்டத்தைச் சீர்குலைத்தார். அதன் பிறகு தொழிலாளிகள் தற்காலிகமாகப் பின்வாங்கி போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர்.

ஆனாலும் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையும் சுரண்டலும் இம்மியளவும் குறையவில்லை. சங்க முன்னோடிகளும் உதவிப் பொதுச் செயலாளர் அலெக்சாண்டரும் வேலை நீக்கம் செய்யப்பட்டு பழி வாங்கப் பட்டனர். 1986ல் 16.8% போனசு தருவதாக ஒப்பந்தம் போட்ட முதலாளி திடீரென இந்த ஆண்டு 8.33% தான் போனசு தருவேன் என்று அடம் பிடிக்கிறான். இதோடு தொழிலாளிகளின் இன்சென்டிவ்விலும் கை வைத்து சுருட்டுகிறான். முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியன், முன்னாள் ஐ.ஜி. ஸ்ரீபால் ஆகியோரின் நெருங்கிய உறவினர் என்பதால்,அரசையும் போலீசையுமே கைக்குள் போட்டுக் கொண்டு தொழிலாளிகளை ஒடுக்கி வந்த முதலாளி சங்கரனின் அடாவடித்தனம் இன்று மேலும் ஒருபடி முன்னேறி விட்டது.

ஏறத்தாழ ஈராண்டுகளாக குமுறிக் கொண்டிருந்த தொழிலாளிகள் மீண்டும் போராட்டத்தில் குதித்துள்ளனர். தினக்கூலி தொழிலாளிகளை நிரந்தரம் செய்ய வேண்டும், பழிவாங்கப்பட்ட சங்க உதவிச் செயலாளர் அலெக்சாண்டரையும் சங்க முன்னோடிகளையும் மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டும், நியாயமான இன்சென்டிவ், போனசு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் மே 19 முதல் 48 மணி நேர தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினர். தொழிலாளர்களின் உண்ணாவிரதப் போராட்ட முறையை விமர்சித்த அதே சமயம்,தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து, போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள் வழிகாட்டினர்.

அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான தொழிலாளிகள் தங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டும். உண்ணாவிரதம் போன்ற, முதலாளியை எந்த வகையிலும் பாதிக்காத நீர்த்துப் போன போராட்ட முறைகளைக் கைவிட்டு முதலாளியை நிர்பந்திக்கும் வகையிலான புதிய போராட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும். புரட்சிகர அரசியலில் பயிற்றுவிக்கப்பட்டு, பரந்துபட்ட உழைக்கும் மக்களையும் அணி திரட்டிக் கொண்டு தொழிற்சங்கம் புரட்சிப் போராட்டங்களில் இறங்கும் போது புல்லுருவியான முதலாளி சங்கரனும் அவனது எடுபிடிக் கூட்டமும் பொசுங்கிப் போவது திண்ணம்!



ஓங்குக
தொழிலாளர்
போராட்டம்!

தகவல்:
முத்து.
செல்லப்பன்
திருச்சி

---

பெருக்குவது, உற்பத்தித் திறனை உயர்த்துவது என்கிற பெயரில் ஏகாதிபத்திய மூலதன மற்றும் உற்பத்திப் பொருள் இறக்குமதிக்குத் தாராள அனுமதி வழங் கியது; ஏகபோகத்தடை, அந்நியச் செலவாணி தடை ஆகிய சட்டங்களை நீர்த்துப் போகச்செய்தது; ஏராளமான இறக்குமதி - வரிச் சலுகைகளை அளித்தது; இவை எதுவும் முடங்கிக் கிடக்கும் ஆலை உற்பத்தியை உசுப்பி விடவில்லை.

ஐந்து நட்சத்திரக் கலாச்சார மோகம் பரவியது. அந்நிய, ஆடம்பர பாவனைப் பொருட்களுக்கான ஒரு குறுகிய சந்தை உருவாகியது. விரைவிலேயே அந்தச் சந்தையும் நிரம்பி வழிந்தது. தேக்க நிலை எல்லாத் தொழில்களையும் தொற்றிக் கொண்டது. பாவனைப் பொருட்களுக்கு அரசு கடன், தவணை முறை ''சோசலிசம்'' ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது ஆகிய நடவடிக்கைகள் மூலமும் இந்தச் சந்தையை விரிவுப்படுத்த முடியவில்லை.

ஆகவே அடக்க விலையைக் குறைப்பது, அதன் சுமையைத் தொழிலாளி தலையில் ஏற்றுவது என்று முதலாளிகள் தீர்மானித்து விட்டார்கள். இதற்குத் தோதாக தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று பல கருப்புச் சட்டங்களைப் போட்டுத் துணை நிற்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

அதிகாரத்தின் எச்சிலை சுவைத்துப் பழகிய போலிக் கம்யூனிஸ்டுகள் தமது தலைமையிலான தொழிலாளர்களை முற்றாக முதலாளிகளிடம் அடகு வைத்து விட்டார்கள். கருப்புச் சட்டங்களைக் காட்டித் தொழிலாளர்களை மிரட்டுவதில் இப்போது முதலாளிகளையும் விஞ்சி விட்டார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள்.

போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் கருங்காலிகளான காங்கிரசுக்காரர்கள் தலைமையிலான தொழிலாளர்கள் தவிர சிதறிக்கிடக்கும் எதிர்கட்சிகளின் சில உள்ளூர் தலைமையிலான தொழிலாளர்களும் குசேலர், தத்தா சாமந்த், ஏ.கே.ராய் போன்ற பிழைப்புவாதிகள் தலைமையிலான தொழிலாளர்களும் உள்ளனர். முதலாளிகளின் புதிய தாக்குதல்களையும் அதற்குப் பின்பலமாக உள்ள பாசிச ராஜீவ் கும்பலையும் எதிர்த்துத் தாக்குவதற்கான உறுதியும் திராணியும் இல்லாத சந்தர்ப்பவாதிகள், பிழைப்புவாதிகளின் கூட்டம் இது.

இவர்களையும் மீறித்தான் தன்னெழுச்சியான சில போராட்டங்களில் தொழிலாளர்கள் குதிக்கிறார்கள். பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிரான அரசியல் உறுதியும், புரட்சிகர இலட்சியத்தில் பிடிப்பும் கொண்ட புதிய தலைமையின் கீழ் அணிதிரள்வதன் மூலம்தான் இந்தப் போராட்டங்கள் நீடிக்கவும் வலுப்பெறவும் முடியும்; முதலாளிகளின் புதிய தாக்குதல்களை முறியடிக்க முடியும்.

ஆர்.கே



படிப்பகம்

www.padippakam.com



அஜர்பெய்ஜானுடன் இணைந்துள்ள நகோர்னேகாரபாக் பகுதியை தங்கள் மாநிலத்துடன் இணைக்கக் கோரி அர்மீனிய தேசிய இன மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

# தீரவில்லை நெருக்கடி தீவிரமாகிவிட்டது!

கல்லொன்றைத் தூக்கி காலில் போட்டுக் கொள்ளும் முட்டாள்கள் என்று ஏகாதிபத்தியவாதிகளைக் கேலியாகக் குறிப்பிடுவார் தோழர் மாவோ. அதிலும் சமூக ஏகாதிபத்திய வாதிகளான ரஷியாவின் புதிய ஜார்கள் பாறாங்கல்லைத் தூக்கி தன் மீதே போட்டுக் கொள்ளும் படுமுட்டாள்கள் என்பதை அண்மைக்காலமாக நிரூபித்து வருகிறார்கள்.

ரஷியாவின் போலிக் கம்யூனிஸ்டு அதிபர் கோர்ப்பசேவ் 'பிரஸ்டோரிகா-கிளாஸ்நாஸ்ட்' என்ற கேடுகெட்ட முதலாளித்துவக் கொள்கையை ஆரவாரமாக அறிமுகம் செய்தார். அதன்மூலம் தனியார் முதலாளித்துவத்தைத் திறந்துவிட்டு ரஷியாவின் தேங்கிய பொருளாதாரத்தை முன்னேற்றி விடத் துடித்தார். உள்நாட்டு நெருக்கடிகளை தற்காலிகமாகத் தீர்க்க 'பிரஸ்டோரிகா' திட்டம் உதவும் என்று நம்பினார். தனது திட்டத்தை மக்கள் ஆதரவுடன் நடைமுறைப்படுத்த தனது திரிபுவாத ஆசானும் மறைந்த முன்னாள் அதிபருமான பிரஷ்னேவையே சாடினார். பிரஷ்னேவ் நாட்டை எதிர்திசையில் வழி நடத்திச் சென்றதாகக் கூறி, பிரஷ்னேவ் விசுவாசிகளை அதிகாரத்திலிருந்து கழற்றி எறிந்தார். இரும்புத் திரையை விலக்கி சுதந்திரமும் ஜனநாயகமும் பூத்துக் குலுங்க 'கிளாஸ்நாஸ்ட்' கொள்கையை அமுலாக்கினார். கிழக்கே சிவப்புச்சாயம் பூசிய அமெரிக்காவாக ரஷியாவை மாற்றி விடத் துடித்தார். ஆனால் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக ரஷியாவில் அடுத்தடுத்து தேசிய இனக் கலவரங்கள் பீறிட்டெழுந்து கோர்ப்பசேவின் நைலான் கனவுகளைச் சுட்டெரிக்கின்றன.

ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன் வெடித்த ஆர்மீனியக் கலவரம் சற்றே தணிந்திருப்பது போல் தோன்றினாலும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ரஷியாவின் தெற்கேயுள்ள, கிறிஸ்துவ மதக் கலாச்சாரத்தின் வழிவந்த சிறுபான்மையினரான ஆர்மீனிய தேசிய இன மக்கள், முஸ்லிம் மக்கள் நிறைந்த அண்டை மாநிலமான அஜர்பெய்ஜானுடன் இணைந்துள்ள நகார்னோ-காராபாக் பகுதிகளை அர்மீனியாவுடன் இணைக்கக் கோரி தொடங்கிய போராட்டம் இன்னமும் தொடர்கிறது. ஏற்கனவே இப்போராட்டம் இனக்கலவரமாக உருவெடுத்து, 100க்கும் மேற்பட்டவர்களைப் பலி கொண்டு, ராணுவம் புகுந்து அடக்கியும்கூட இன்னும் ஓயவில்லை. இப்போது புதிய கோரிக்கைகளுடன் அர்மீனிய மக்கள் போராடுகிறார்கள்.

"அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ரஷியாவின் தெற்கே எதிர்ப்புரட்சியாளர்களின் கலகத்தை அடக்கிய போது அர்மீனிய கிறிஸ்துவ மக்கள் நிறைந்த நகார்னோ-காரபாக் பகுதி முஸ்லிம்கள் நிறைந்த அஜர்பெய்ஜானுடன் இணைக்கப்பட்டு விட்டது. அப்பகுதியிலுள்ள எமது அர்மீனிய சகோதரர்கள் அர்மீனிய மொழியைப் பேச முடியாமல் துண்டிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மாதா கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்ய வாய்ப்பில்லை"

"உக்ரைன், பைலோ ருஷ்ய, ஜியார்ஜிய தேசிய இனங்கள் தங்கள் தேசிய மொழி, வரலாறு, கலை முதலானவற்றை வெகுவாக வளர்த்துள்ளனர். தங்கள் கல்வி-கலாச்சார நடவடிக்கைகளுக்கு அரசிடம் சலுகையும் பெறுகின்றனர். ஆனால் அர்மீனியர்களான நாங்கள் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளோம்".

இவை போராட்டத்தை நியாயப்படுத்தி அர்மீனிய மக்கள் முன்வைக்கும் வாதங்கள். இதோடு பிரஷ்னேவ் விசுவாசிகளும் ஊழல் பெருச்சாளிகளுமான அர்மீனிய தேசிய இனத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை கோர்ப்பசேவ் கும்பல் அதிகாரத்துக்கு வந்ததும் பொறுப்பிலிருந்து நீக்கத் தொடங்கியது. கடந்த ஆண்டு அர்மீனியத் தலைவர் காரென் டெமிர்ச்யான் ஊழல்-அதிகார முறைகேடுகள் காரணமாக கோர்ப்பசேவ் கும்பலால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். இது அர்மீனிய மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. 'யார் தான் ஊழல் செய்யாமலில்லை? எங்கள் இனத்தவர்கள்தான் ஏமாளிகளா என்று கலவரத்தில் இறங்கினர்.

சமீப காலமாக நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள கோர்ப்பசேவ் கும்பலுக்குப் பெரும் தலைவலியாக இருப்பது அர்மீனிய கலவரம் மட்டுமல்ல; இப்போது லாட்வியர்கள், லிதுவேனியர்கள், எஸ்டோனியர்கள், கிரிமியன் தார்த்தாரியர்கள் என்று பல்வேறு தேசிய இன மக்களும் போராட்டத்தில் குதிக்கிறார்கள். போராட்டங்கள் அர்மீனியாவைப் போலவே பெருங் கலவரமாக உருவெடுக்கின்றன. 'ரௌடித்தனமும், சூறையாடலும், தீ வைப்பும், சமூக விரோதிகளின் ஆதிக்கமும் பெருகி விட்டது என்று ரஷியாவின் 'டாஸ்' செய்தி நிறுவனமே குறிப்பிடுகிறது.

அர்மீனியக் கலவரத்துக்கு முன்னோடியாக 86ம் ஆண்டின் இறுதியில் கசாகஸ்தானில் பெரும் கலவரம் மூண்டது. ஏற்கனவே கசாக் தேசிய இனம் புறக்கணிக்கப்படுவதாக மக்கள் குமுறிக் கொண்டிருந்தனர். இதே நேரத்தில், பிரஷ்னேவ் கும்பலின் முக்கிய புள்ளியும், ஊழல் பெருச்சாளியுமான குனயேவ் என்கிற கசாக் தலைவரை கோர்ப்பசேவ் கும்பல் அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்டு ரஷிய தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொறுப்பில் அமர்த்தியதும் அது கசாக் மக்களிடம் ஆத்திரத்தை மூட்டிவிட்டது. கலவரமும் வன்முறையும் மூண்டது. அரசு வாகனங்கள் கொளுத்தப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர்.

பெருகி வரும் தேசிய இனக் கலவரங்களைக் கண்டு வெறுப்புறும் கோர்ப்பசேவ் கும்பல், "இது பிரஸ்



படிப்பகம்

www.padippakam.com

டோரிகா கொள்கைக்கு குழிபறிக்கும் முயற்சி! சமூக விரோதிகள் - தீவிரவாதிகளின் செயல்!" என்று சாடுகிறது. ஒருபுறம் வீழ்த்தப்பட்ட பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர்கள் உள்ளிருந்தே கலகங்களையும் சீர்குலைவுகளையும் தூண்டிவிட்டு இழந்த சொர்க்கத்தை மீட்க முயற்சிக்கிறார்கள். மறுபுறம் மதப் பிற்போக்குவாதிகள் கோர்ப்பசேவ் அறிவித்துள்ள 'கிளாஸ்நாஸ்ட்' — சுதந்திரக் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு ஆத்திகத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள்.

அதிகாரப் போட்டிக்காகவும், ஆத்திகத்தை உயிர்ப்பிக்கவும் பிற்போக்குவாதிகளால் தலைமை தாங்கப்பட்டு, திசை திருப்பப்பட்டு கலவரமாகத் தொடர்வதாலேயே இப்போராட்டங்கள் எதிர்ப்புரட்சிகரமானது என்று ஒதுக்கி விடமுடியாது. நீண்டகாலமாக குருச்சேவ்-பிரஷ்னேவ் கும்பல்களால் ரஷியாவில் சிறுபான்மை தேசிய இனங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவுதான் இது. அதன் வெளிப்பாடுகள் வேறாக இருந்தாலும் சாராம்சத்தில் சிறுபான்மை தேசிய இனங்கள் அடக்கியொடுக்கப்பட்டதையே நிரூபிக்கின்றன. "உண்மைதான்! நாங்கள் கடந்த காலத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கத் தவறியுள்ளோம்" என்று ஒப்புக் கொள்கிறார் 'பிராவ்தா' பத்திரிக்கையின் பிரதான ஆசிரியரான விக்டர் அஃபனாஸ்யேவ்.

சேற்றிலிருந்து புதைகுழிக்குள் சிக்கிக் கொண்ட கதையாக, பிரஸ்டோரிகா திட்டத்தை அறிவித்து உள்நாட்டு நெருக்கடியைத் தற்காலிகமாகத் தீர்க்கப் புறப்பட்ட கோர்ப்பசேவ் கும்பல் இப்போது மீளமுடியாத தேசிய இனப் பிரச்சினைக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. அர்மீனியாவில் புதிதாகப் பொறுப்பேற்ற ருஷ்ய இனத்தைச் சேர்ந்த அதிகாரியை நீக்கிவிட்டு, அர்மீனியக்காரரையே அமர்த்தியது, நகார்னோ. காரபாக் பகுதியில் அர்மீனிய தொலைக்காட்சிக்கான ஏற்பாடு, அப்பகுதி மக்களுக்கு கிறிஸ்துவ கோவிலில் வழிபடுவதற்கான வசதிகள் முதலான சலுகைகளை கோர்ப்பசேவ் கும்பல் அறிவித்ததோடு, தேசிய இனங்களின் கோரிக்கைகளை ஆராய தனியாக ஆய்வு மையம் அமைக்கப் போவதாகவும் நப்பாசை காட்டியது. ஆனாலும் அர்மீனிய மக்கள் அடங்கிப் போவதாகத் தெரியவில்லை. சர்வதேச மகளிர் தினத்தை அர்மீனியப் பெண்கள் முற்றாகப் புறக்கணித்து எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இவையெல்லாவற்றையும்விட, ரஷியாவில் பெரிய தேசிய இனமான 'மகா' ருஷ்யர்கள் இந்த நூற்றாண்டின் இறுதியில் சிறுபான்மையினராகி விடுவார்கள். ஒப்பீட்டளவில் சிறுபான்மை தேசிய இனங்களின் பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதால் அவர்கள் பெரும்பான்மையினராகி விடுவர். எனவே ருஷ்யர்கள் இனி அதிகாரத்தில் கூடுதலாக பங்கு வகிக்க முடியாமல் போகும். எனவேதான் சிறுபான்மை தேசிய இன மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்று நூறுக்கும் மேற்பட்ட சிறுபான்மை தேசிய இன மக்கள் கருதுகிறார்கள். இதோடு லஞ்ச ஊழல், கள்ள மார்க்கெட், போதைப் பொருட்கள், மேற்கத்திய ஆபாசச் சீரழிவுக் கலாச்சாரம் அனைத்தும் சேர்ந்து கொண்டு 'பிரஸ்டோரிகா' கொள்கையை நடைமுறைப்படுத்த விடாமல் கோர்ப்பசேவ் கும்பலை அச்சுறுத்துகின்றன.

என்ன செய்வது? கோர்ப்பசேவ் உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது. மாவு விற்கப்போனால் காற்றடிக்கிறது. இனி பழைய நிலைக்கும் போக முடியாது. அதன்மூலம் உள்நாட்டு நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது என்பதால்தான் 'கிளாஸ்நாஸ்ட்-பிரஸ்டோரிகா' கொள்கையை அறிவித்தது கோர்ப்பசேவ் கும்பல். இப்போது புதிய கொள்கையையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. புதிய கொள்கையின் விளைவாகக் கிடைத்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தேசிய இனங்கள் போராடக் கிளம்பிவிட்டன. இரண்டுக்கும் நடுவே மாட்டிக் கொண்டு ஆப்பசைத்த குரங்காக அலறுகிறது கோர்ப்பசேவ் கும்பல்.

— பாலன்

## சீரழிந்த சீனத்தில் மணப் பெண்கள் ஏலம்!

கிராமத்து வீதிகளிலே மணப் பெண்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்படுகின்றனர். அவர்களின் மார்பின் மேல் ஒரு துண்டுச் சீட்டு. அதில் அப்பெண்ணின் பெயரும் வயதும் விலையும் குறிக்கப்பட்டுள்ளது. அவர்களை மணமகன்களும் உறவினர்களும் சுற்றிச்சுற்றி வந்து பார்வையிடுகின்றனர். சிறிது நேரத்தில் ஏலம் தொடங்குகிறது. மணப்பெண் என்ற விலைபொருளின் தரத்திற்கேற்ப ஏலத்தொகை ஏறி இறங்குகிறது!

20ம் நூற்றாண்டில் இப்படியொரு கொடுமை எங்கே நடக்கிறது? தேவதாசி முறை இன்னமும் நீடித்துவரும் கருநாடகத்திலா? அல்லது நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மை கோலோச்சும் பீகாரிலா? இல்லை! நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் மரண அடி கொடுத்து மூன்றாம் உலக நாடுகளின் விடுதலைக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த சீனாவில்தான் இக்கொடுமை!

1985ல் மட்டும் 131 பெண்கள் இதுபோல் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளனர். 1986ல் இது தீவிரமாக முன்னேறி 323 ஆக உயர்ந்தது. இப்போது இது ஆயிரக்கணக்கில் உயர்ந்திருக்கும் என்று 'ஹார்பின் மாலைச் செய்தி' என்ற சீனப் பத்திரிக்கையே எழுதியுள்ளது. குறிப்பாக சிச்சுவான், ஹேனான் மாநிலங்களில் இப்பழமைக் கொடுங்கோன்மை மீண்டும் விஷவேராகப் பரவி வருகிறது. ஒரு 19 வயது இளம் பெண்ணை நான்கு சகோதரர்கள் தங்களது கூட்டு மனைவியாக ஏலத்தில் எடுத்துள்ளனராம்; தெற்கு யுன்னான் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இளம்பெண் ஏலத்தில் விற்கப்பட்ட பிறகு அவளது கணவன் அவள் தப்பியோடாதிருக்க கொடிய சித்திரவதைகளைச் செய்தானாம். இத் தகவல்களையும் அந்தப் பத்திரிக்கையே கூறுகிறது.

அந்தோ! நிலப்பிரபுத்துவத்தோடு ஆணாதிக்கத் தளைகளை அறுத்தெறிந்து வரலாற்றுச் சிறப்புமிக்க நீண்ட பயணத்திலும், புதிய ஜனநாயகப் புரட்சியிலும் பங்கேற்ற வீராங்கனைகளைக் கொண்ட செஞ்சீனத்திலா இந்த அடிமை வியாபாரம்? பெண்ணாகப் பிறந்தவள் மணமுடிக்கும் வரை தந்தைக்கும், மண முடித்தபின் கணவனுக்கும் அடிமை என்ற கேவலமான மரபுகளை உடைத்தெறிந்த கம்யூனிச பூமியிலா இந்தக் கொடுமை? இது எப்படி சாத்தியமாயிற்று?

பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான தலைவர் மாவோவின் மறைவுக்குப் பிறகு சீனத்தில் முதலாளித்துவப் பாதையாளர்களான டெங் கும்பல் உள்ளிருந்தே கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றியது. 'நவீனமயம்' என்ற பெயரில் அப்பட்டமான முதலாளித்துவ உற்பத்தி முறைக்கும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கும் கதவை அகலத் திறந்து விட்டது. அதன் விளைவாக மேற்கத்திய சீரழிவுக் கலாச்சாரமும், சீனத்தின் நிலப்பிரபுத்துவ பழமைப் பிற்போக்குக் கலாச்சாரமும் கூட்டுச் சேர்ந்து கொண்டு எவ்விதத் தடையுமின்றி நாட்டையும் மக்களையும் வேகமாகச் சீரழித்து வருகின்றன. டெங் கும்பல் அதிகாரத்துக்கு வந்ததிலிருந்து பணவீக்கம் பெருகியது மட்டுமல்ல; அதைவிட பன்மடங்கு அதிகமாக வரதட்சிணையும் பெருகிவிட்டது. இன்று மேலும் ஒருபடி முன்னேறி பெண்களையே ஏலத்தில் விற்கும் நிலைக்குச் சீரழிந்துவிட்டது.

எல்லாம் முதலாளித்துவத்தை அரங்கேற்றியதால் வந்த வினை! டெங் கும்பல் சீனத்தை சுதந்திரமாக நவீன மயப்படுத்தப் போக, இப்போது சுதந்திரமாக புரையோடிய பழங்கொடுங்கோன்மை ஆட்டம் போடுகிறது. சீன மக்களைப் பொருத்தவரை இது ஒரு தேசிய அவமானமாக இருக்கலாம். ஆனால் உலகப் பாட்டாளிகளுக்கோ இது ஒரு எதிர்மறை அனுபவம்!

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

### ⑨

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தேசிய இனப்பிரச்னையில் மார்க்சிய லெனினிய அணுகுமுறையைக் கைக் கொள்வதற்குப் பதில் போலிக் கம்யூனிஸ்டுகள் 'தேசிய'-'அகில இந்திய' நீரோட்டத்தில் இரண்டறக் கலந்தனர். மத்தியில் ஆட்சி நடத்தியவரும் தரகு அதிகார முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் கட்சியாகிய காந்தீய காங்கிரசின் தேசிய இன ஒடுக்குமுறைக் கொள்கையை விசுவாசமாக ஏற்று ஆதரித்தனர். அதே சமயம் திராவிடக் கட்சிகளுடன் சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கினர். தமிழகத்தின் எதிர்க்கட்சியாயிருந்த 'கம்யூனிஸ்டு' கட்சியின் வீழ்ச்சிக்கும், திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சிக்குமான முக்கியமான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

ராமமூர்த்தி தனது நூலில் கொடுத்துள்ள விவரங்களின்படி, திராவிட நாட்டைத் தனி நாடாக்க வேண்டும் என்பது 1938 டிசம்பரில் நீதிக்கட்சி மாநாடு சென்னையில் கூடிய போது பெரியார் ஆற்றிய பேருரையில் உள்ளது. ஆனால் அப்போது திராவிட நாடு என்பதற்கான வரையறை கொடுக்கப்படவும் இல்லை; அந்தக் கோரிக்கை அந்த மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானம் எதுவும் நிறைவேறவுமில்லை; அதாவது அது பெரியார் கிளப்பிய கோஷமே தவிர, அதிகாரபூர்வமான கோரிக்கையல்ல என்கிறார் ராமமூர்த்தி.

1940ஆம் ஆண்டில் திருவாரூரில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில்தான் ''திராவிட நாடு'' கோரிக்கை அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு பெரியாரின் தலைமையிலிருந்ததிராவிடர்கழகமும், அதிலிருந்து பிரிந்த அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிட நாட்டுப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தின. ''வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது'', ''வடநாட்டு ஆதிக்கம்'', ''இந்தி ஏகாதிபத்தியம்'' முதலிய கோஷங்களை முன் வைத்து திராவிட நாட்டுப் பிரச்சாரத்தை வலுவாக நடத்தின.. ''திராவிட நாடு'' கோரிக்கைக்காக கிளர்ச்சி செய்வது பலனளிக்காது என்று கம்யூனிஸ்டுகள் நீண்டகாலமாகக் கூறிவந்தார்கள். நிச்சயமாகக் காலம் அதைக் காட்டிவிட்டது. திராவிடநாடு என்பது கனவுதான் என்பதை அண்ணாதுரையே உணர்ந்து அவரே 1962-ல் அதைக் கைவிட்டு விட்டார். இன்று திராவிட இயக்கத்தினர் என்று கூறிக் கொள்ளும் திராவிடக் கட்சிகள் எல்லாம், ''நாங்கள் பிரிவினையைக் கோரவில்லை'' என்று மீண்டும் மீண்டும் சத்தியம் செய்கின்றன என்று கூறுகிறார் ராமமூர்த்தி.

இதற்கு ராமமூர்த்தி கூறும் முக்கியமான காரணம் பின் வருவதாகும், ''தி.மு.க.வின் 'தனித் திராவிட நாடு' கோரிக்கையைக் காட்டி, தமிழ்நாட்டு முதலாளிகளும், அரசும் போதிய அளவு மத்திய சர்க்காரிடம் லைசென்சுகளை வாங்கி, தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவிய பிறகு, இந்த தனித் திராவிட நாட்டுக் கோரிக்கை பயனற்றுப் போய்விட்டது. எவ்வளவுதான் தமிழ்நாட்டை பொன் விளையும் நாடு என்று புகழ்ந்த போதிலும் உண்மை நிலை என்ன? தமிழ்நாட்டிற்கு நீர்ப்பாசன வசதிக்காகத் தண்ணீர் வேண்டுமானாலும் கர்நாடகத்திலும் கேரளத்திலும் உற்பத்தியாகும் நதிகளிலிருந்துதான் பிரதானமாகக் கிடைக்க வேண்டும். அதேபோன்று, தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்பு, உருக்கு, நிலக்கரி ஆகிய அனைத்தும் வெளி மாநிலங்களில் இருந்தே வரவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கான சந்தை பரந்த இந்திய சந்தை. எனவே இந்த நிலையில் தனித் திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டது.''

(ராமமூர்த்தி நூல் பக். 462)

சுருக்கமாகச் சொன்னால் தமிழ் நாட்டு முதலாளிகளின் நலன்களைப் பிரதிபலிக்கும் வகையிலான, ''திராவிட நாடு'' கோரிக்கையைமுன் வைத்து பல பத்திரிக்கைகளைத் துவக்கி, பள்ளி - கல்லூரி மாணவர்களை மயக்கி, அவர்களைக் கொண்டு கிராமப்புற மக்களிடையே கவர்ச்சியை ஏற்படுத்தி தி.மு.க. வளர்ந்து விட்டது என்பது தான் ராமமூர்த்தியின் சித்தரிப்பாகும். ராமமூர்த்தி இங்கே இரண்டு உண்மைகளை மூடி மறைக்கிறார்.

● முதலாவதாக, ''திராவிட நாடு'' கோரிக்கை தமிழ்நாட்டு முதலாளிகளின் நலன்களைப் பிரதிப்பலிப்பது தான்; அந்த நோக்கத்திற்காகத் தான் ''வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது'', ''வட நாட்டு ஆதிக்கம்'', ''இந்தி ஏகாதிபத்தியம்.'' போன்றவை பிரச்சாரம் செய்யப்பட்டன. ஆனாலும் இந்தப் பிரச்சாரத்தில் உண்மையே கிடையாது என்று நிராகரித்து விட முடியுமா? இந்தி திணிப்பும் அதற்கு எதிரான போராட்டமும் திராவிடக் கட்சிகள் ஆடும் பிரச்சார நாடகம் என்று ஒதுக்கிவிட முடியுமா? வடகிழக்கிந்திய மாநிலங்கள் உட்பட ஆதிவாசி மலைவாழ் மக்கள் வாழும் பல பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு தனி மாநிலம் அல்லது தனிநாடு கோரி நடக்கும் போராட்டங்கள் உண்மையானவை அல்லவா? மத்திய அரசு மேற்கு வங்கத்தைப் புறக்கணிப்பதாகக் கூறி போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் பிரச்சாரம் வெறும் கூச்சல் தானா?

ஏன் இப்போது கூட தமிழகத்தின் நிலை என்ன? சேலத்தில் இரும்பு உருக்கு ஆலை நிறுவக்கோரி பலமுறை மன்றாடி, டில்லிக்குக் காவடி தூக்கிய பிறகு உருக்கு ஆலை நிறுவுவதாக அடிக்கல் நாட்டி விட்டு 'எவர்சில்வர்' உருட்டாலை தான் வந்தது. ஊட்டியில் நிறுவ இருந்த கலர் பிலிம் தொழிற்சாலை ரேபரேலிக்கும், போத்தனூரில் நிறுவ இருந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை கப்பூர்தலாவுக்கும் சென்னை-பாடியில் நிறுவ இருந்த ஆவடி டாங்கிகளுக்கான உதிரி உறுப்புத் தொழிற்சாலை கார்வாலுக்கும் போயின. பல தொழில் லைசென்சுகள் நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளன. காவிரி வடிகால் பகுதியில் எடுக்கப்படும் ''பெட்ரோலியம்'' கச்சா எண்ணெய்க்கு ''ராயல்டி'' மறுக்கப்படுவதோடு அங்கு தொழிற்சாலைகளும் நிறுவ மறுக்கிறது, மத்திய அரசு. தெலுங்கு கங்கைத் திட்டத்தைக் கிடப்பில் போட்டதோடு, காவிரியில் தமிழ்நாட்டுக்குள்ள நியாயமான உரிமையும் மறுக்கப்படுகிறது. கரூர் – தூத்துக்குடி அகல ரயில்பாதை, சென்னை பெருநகர் துரித ரயில் பாதை, சோலையார் பேட்டையிலிருந்து மின்சார ரயில் பாதை அமைப்பது ஆகிய திட்டங்கள் அற்பநிதி ஒதுக்கி ஆமை வேகத்தில் நகர்கின்றன. கிழக்குக் கடற்கரை சாலை சேதுகால்வாய்த் திட்டம் ஆகியன கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இப்படிப் பல திட்டங்களில் தமிழகம் புறக்கணிப்பது பற்றி போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் ஜனநாயக வாலிபர்



படிப்பகம்

www.padippakam.com

சங்கத்தின் இந்த மாத ''இளைஞர் முழக்கமும்'' எழுதியுள்ளது. அதே சமயம் நிறைவேறாத பல திட்டங்களுக்காக வட நாட்டில் நிதி ஒதுக்கி விரயமாக்கப் படுகிறது. இந்த உண்மைகளை எல்லாம் மூடி மறைத்து விட்டு ''பணத் தோட்டம்'' நூலில் அண்ணாத்துரை எழுதிய ''வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது'' என்கிற கருத்தைக் கேலி செய்கிறார் ராமமூர்த்தி முதலாளித்துவத்தின் இயல்பான ஏற்றத்தாழ்வான வளர்ச்சியின் விளைவுகள் தாம் இவை என்று ஏற்றுக் கொள்ளும்படி 'அகில இந்திய தேசிய' த்துக்காகப் பரிந்து கட்டிக் கொண்டு வாதிடுகிறார்.

● இரண்டாவதாக, தமிழ் நாட்டு முதலாளிகளின் நலன்களைப் பிரதி பலிக்கும் கோரிக்கைதான் ''திராவிட நாடு'' என்கிற முழக்கம் அதுவும் தேசிய இன ரீதியில் அல்லாது கொச்சையான முறையில் ஆரியர்-திராவிடர் என்கிற வர்ண இன (RACE) ரீதியில் எழுப்பப்படுவதுதான். அரசியல், சமூக, கலாச்சாரம் மற்றும் பூகோள ரீதியில் பல வரலாற்றுப் புரட்டுகள் செய்து தான் நியாயப்படுத்துகிறார்கள். இந்தக் குறைபாடுகள் இருந்தாலும் தமிழக மக்களிடம் அந்த முழக்கம் ஒரு செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறது — அது ஏன் என்கிற கேள்வி எழுப்பி விடை காண போலிக் கம்யூனிஸ்டுகள் விழையவே இல்லை.

பல்வேறு பிரிவு மக்களும் இயல்பாக ஒன்று கலந்து உருவான, ஒரே தேசமல்ல இந்தியா. காலனி யாதிக்க வாதிகளால் பலாத்காரமான முறையில் பிணைக்கப்பட்ட பல்வேறு தேசிய இன மக்களை உள்ளடக்கிய ஒரு நாடு தான் இந்தியா. காலனிய காலத்திலேயே வர்ணா சிரம தர்மம், இந்தி திணிப்பு இந்துஸ்தான் என்கிற, செயற்கையானதொரு 'அகில இந்திய தேசிய' த்தை உருவாக்கி, முன்னிறுத்தி விடுதலைப் போராட்டத்தை சிதைத்தது தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்கள் கட்சியாகிய காங்கிரசு. அதிகார மாற்றத்திற்கு பிறகு அதே அடிப்படையிலான அரசியல் நிர்ணய சட்டத்தை வகுத்து பல்வேறு தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்குகிறது. வரலாறு பூர்வமாக சமூக ஆதிக்கம் வகித்துவந்து பார்ப்பன சாதியினர், காங்கிரசின் மூலம் அரசியல் ஆதிக்கமும் வகிக்கிறார்கள்.

தேசிய இன ஒடுக்குமுறை மற்றும் பார்ப்பணீய ஆதிக்கம் என்கிற இரு எதிர்த்த நிலமைகள்தான் திராவிடக் கட்சிகள் வளர்வதற்கான அடிப்படைகளை உருவாக்கியுள்ளன. இந்த உண்மையை உணர்ந்து அனைத்து தேசிய, இனங்களுக்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்காகவும், சாதீயத்தை ஒழிப்பதற்காகவும் போராடாமல் போலிக் கம்யூனிஸ்டுகள் 'அகில இந்திய தேசிய' த்துடன் ஐக்கியப்பட்டு பார்ப்பணிய ஆதிக்கத்தை மூடி மறைக்கின்றனர்.

எனவேதான் பாகிஸ்தான் பிரிவினையை ஏற்பதிலும், திராவிடநாடு கோரிக்கையை நிராகரிப்பதிலும் போலிக் கம்யூனிஸ்டுகள் பாராபட்சமான சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை மேற்கொண்டனர். ராமமூர்த்தியின் நூலிலேயே இதற்கான ஒப்புதல் வாக்குமூலம் உள்ளது.

பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கையை முஸ்லீம் லீக் முன் வைத்தபோது போலிக் கம்யூனிஸ்டுகள் எடுத்த நிலைப்பாடு பற்றி பின்வருமாறு ராம மூர்த்தி எழுதுகிறார். ''இந்தியாவில் காங்கிரசு-முஸ்லீம் லீக் ஒற்றுமையை நிறுவி விட்டால் உலக அரங்கிலேயே தனிமைப்பட்டுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் (இரண்டாவது உலக) யுத்த நெருக்கடி முற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்திய சுதந்திரத்தை மறுக்கமுடியாது என்று கருதியது.

''மார்க்சியக் கண்ணோட்டத்தில் (கம்யூனிஸ்டுகள்) நடத்திய இந்த ஆலோசனையின் விளைவாக; இந்தியா பன்மொழிகள் பேசும் பல கலாச்சாரங்களையும், வரலாற்று ரீதியாக ஏற்பட்ட பண்பாடுகளையும் கொண்ட மக்கள், தொடர்ந்தாற் போலுள்ள பிரதேசத்தில் வாழும் பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு. இந்த தேசிய இன மக்கள் பிரிட்டிஷ் சர்க்காரால் பல்வேறு மாகாணங்களில் பிரிக்கப் பட்டு இருந்தனர். இந்த மாகாண அமைப்புகளைத் தவிர்த்து, ஒரே மொழி பேசும், ஒரே கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் கொண்ட தேசிய இனங்கள் வாழும் பிரதேசங்களை தனித்தனி மாநிலங்களாக பிரிக்க வேண்டும். இந்த மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமையும், சுய நிர்ணய உரிமையும் வழங்க வேண்டும். அத்தகைய மாநிலங்களைக் கொண்ட ஜனநாயக சமஷ்டி அமைப்பாக சுதந்திர இந்தியாவில் அரசியல் அமைப்பு இருக்க வேண்டும்.

''இந்த மாநிலங்கள் ஒரே சமஷ்டி அமைப்பில் ஒன்றுபட்டு இருந்தால்



தான் இந்த மக்களின் நலன்களுக்கு சாலப் பொருத்தமாகும். அந்த ஒற்றுமையின் மூலம்தான் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், இந்திய மக்களின் வறுமைப் பிரச்சினையைத் தீர்ப்பதும் சாத்தியமாகும் என்ற முடிவுக்கு கம்யூனிஸ்டு கட்சி வந்தது இந்தக் கருத்துக் கொண்ட ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது.'' (ராமமூர்த்தி நூல் பக் 180)

1942 ஆகஸ்டில் பம்பாயில் கூடிய காங்கிரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. இம்மாநாட்டில் பங்கேற்ற ராமமூர்த்தி உட்பட ''கம்யூனிஸ்டுகள்'' ஒரு திருத்தம் கொண்டு வந்தனர். அது பற்றி பின்வருமாறு ராமமூர்த்தி குறிப்பிடுகிறார். ''இன்றைய உலக நிலைமையையும் நாட்டிலுள்ள நிலைமையையும் நன்கு உணர்ந்து விவேகமான முடிவெடுக்க வேண்டும். உலகிலே இந்திய சுதந்திரம் சம்பந்தபட்ட மட்டில், பிரிட்டிஷ் சர்க்கார் தனிமைப்பட்டிருக்கிறது. இந்தியாவில் காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்கும் உள்ள பிளவையே அது துருப்புச் சீட்டாக உபயோகித்து சுதந்திரத்தையும் உடனடியாக ஒரு தேசிய சர்க்கார் அமைக்கும் கோரிக்கையையும் மறுக்கிறது. அந்தத் துருப்புச் சீட்டை அதனடமிருந்து பிடுங்கி விட்டால் அதாவது காங்கிரசு - லீக் ஒற்றுமையை நிலைநாட்டி விட்டால், உடனடியாக தேசிய சர்க்கார் அமைப்பதை பிரிட்டிஷ் சர்க்கார் மறுக்க முடியாது.

''இந்த ஒற்றுமை ஏற்படும் வழியிலேயே, இந்த தீர்மானத்தின் நடுப்பகுதி - சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு பற்றிய பகுதி-வெகுதூரம் சென்றிருக்கிறது. கூடுதல் அதிகாரங்கள் உள்ள மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி அமைப்பாகவே அது இருக்கும் என்று அது கூறுகிறது. இன்னும் சிறிது மேலே போய் அவைகளுக்கு குறிப்பாக மேற்கிலும், கிழக்கிலும் மெஜாரிட்டி முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும் சேர்த்துக் கொண்டால், காங்கிரசு முஸ்லீம் லீக் ஒற்றுமைக்கு அடித்தளம் ஏற்பட்டு விடும். அந்த அடிப்படையில் உடனே காங்கிரசு தலைவர்களிடம் பேச்சு வார்த்தைகள் துவங்கப்பட வேண்டும். உடன்பாடு கண்டு, இந்தியாவின் பிரதான அரசியல் சக்திகள் உடனடியாக தேசிய சர்க்காரை அமைக்கக் கோரினால் இன்றுள்ள சர்வதேச நிலையில் யுத்த நெருக்கடியில் பிரிட்டிஷ் சர்க்காரால் அதை மறுக்க முடியாது. அதுதான் விவேகமாக இருக்கும். வெகுஜனப் போராட்டம் என்ற பயமுறுத்தல் பிரிட்டிஷ் சர்க்காரை தேசிய இயக்கத்தைப் பற்றி உலக அரங்கில் துஷ்பிரச்சாரம் செய்வதற்குத் தான் உதவும் என்று நாங்கள் வாதித்தோம்'' மேற்படி நூல் பக் 186

மேற்கண்டவை மூன்று விஷயங்களைத் தெளிவு படுத்துகின்றன. யுத்த



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிரான வெகுஜனப் போராட்டம் துவங்குவதை போலிக் கம்யூனிஸ்டுகள் எதிர்த்தார்கள். விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க கட்சியை ஒரு பிரதான அரசியல் சக்தியாக வளர்த்து தலைமையைக் கைப்பற்ற ஒருபோதும் முயலாத போலிக் கம்யூனிஸ்டுகள் நெருக்கடியின் உச்ச கட்டத்தில் கூட காங்கிரசு - லீக் தலைவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி, அரசியல் அதிகாரத்தை ஒப்படைப்பதையே தீர்வாகக் கருதினர்.

இந்த இரு துரோகங்களும் ஒருபுறம் இருக்க, பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கைக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் வைத்த தீர்வு ''வடமேற்கிலும் கிழக்கிலும் மெஜாரிட்டி முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு'' என்பதை ஏற்பதாகும். ஆனால் திராவிடநாடு கோரிக்கையை முன் வைத்த பெரியாரிடம் ராமமூர்த்தி முன் வைத்த தீர்வு என்ன தெரியுமா? பின்வருமாறு அவரே கூறுகிறார். ''சுதந்திரத்திற்குப் பிறகு 1952-ல் நடந்த முதல் பொதுத் தேர்தலுக்கு முன் நான் தலைமறைவாக இருந்த காலத்தில் 1951-இல் ஷெனாய் நகரில் உள்ள குத்தூசி குருசாமி அவர்களது வீட்டில் பெரியாரை 15 நாட்களுக்கு மேலாக இரகசியமாக இரவு 10 மணிக்கு மேல் சந்தித்து விவாதித்திருக்கிறேன். எங்கள் கட்சியின் திட்டமாகிய மாநில சுயாட்சிக் கோரிக்கையை விளக்கியிருக்கிறேன்''

மேற்படி, நூல் பக் 159

அப்போது நடந்த திண்டுக்கல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் போலிக் கம்யூனிஸ்டு வேட்பாளர் ஏ. பாலசுப்பிரமணியத்துடன் கலந்து கொண்டு ''கம்யூனிஸ்டுகள் விரும்பும் மாநில சுயாட்சியை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி இந்தியாவாக இருந்தால் அது பாலசுப்பிரமணியம் விளக்கியபடி இருக்குமானால், நான் தனித்திராவிட கோரிக்கையை வற்புறுத்த மாட்டேன்'' என்றும் பெரியார் பேசினார்.

மேற்படி, நூல் பக்.159

ஆக இதிலிருந்து தெரிவது என்ன ? பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கை வந்தபோது சுய நிர்ணய உரிமையையும், திராவிட நாடு பிரிவினை கோரிக்கை வந்தபோது மாகாண சுயாட்சியையும் தீர்வாக வைத்தார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள். சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய அதிகபட்ச ஜனநாயக உரிமையைக் கோருவதாகும்; மாகாண சுயாட்சி என்பது கூடுதல் அதிகாரம் என்கிற பெயரில் பல்வேறு தேசிய இனங்களை பலாத்காரமாக அடக்கி வைப்பதாகும் — என்று இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை லெனின் மிகத் தெளிவாக வரையறுத்துள்ளனர். இந்த வேறுபாட்டின் அடிப்படையில் பார்க்கும் பொழுது சுயநிர்ணய உரிமையைக் கூட கைவிட்டு மாகாண சுயாட்சியையே ஏற்கவும் பெரியார் தயாராயிருந்தார். ஆனால் அதையும் மறுத்து காங்கிரசு ஆட்சி பல்வேறு தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கி வருகிறது. பெரியார் கூறுவதைப் போலவே அரசியல் ரீதியாக பார்ப்பன ஆதிக்கத்தை காங்கிரசு நீட்டித்திருக்கிறது''திராவிட நாடு'' கோரிக்கை தேசிய இன (Nationalities) அடிப்படையிலானது அல்ல. ஆரியர் — திராவிடர் என்கிற வர்ண இன (RACE) அடிப்படையிலானது; அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பூகோள ரீதியிலான பல வரலாற்றுப் புரட்டுகள் செய்து நியாயப்படுத்தப்படுகிறது. தமிழ்,' தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு வெவ்வேறு தேசிய இன மக்களை உள்ளடக்கிய கற்பனையானதொரு கோரிக்கை — ஆகிய குறைபாடுகள் உள்ளது உண்மைதான். அதே போல ''பாகிஸ்தான் பிரிவினை'' முழக்கமும் தவறானது. வங்காளம், பலூச்சிஸ்தான், பஞ்சாப் போன்ற வெவ்வேறு தேசிய இன மக்களை உள்ளடக்கிய மத ரீதியிலானது. பொதுமொழி, பொதுப் பண்பாடு, பொதுப் பொருளாதாரம் மற்றும் பொதுவான அரசியல் — பூகோள அடிப்படையைக் கொண்டு தான் ஒரு தேசிய இனத்தைத் தீர்மானிக்க முடியும். இது தவிர மதத்தைக் கொண்டு அனைத்து இஸ்லாம் (PAN - ISLAM) என்கிற அடிப்படையில் தேசிய இனக் கோரிக்கை எழுப்புவது பிற்போக்கானது. மத்திய கிழக்கு நாடுகளில் இப்படிப்பட்ட கோரிக்கை எழுந்தபோதெல்லாம் லெனினும், ஸ்டாலினும் கடுமையாக எதிர்த்தனர்.

ஆகவே, ''பாகிஸ்தான்,'' ''திராவிட நாடு'' ஆகிய இரண்டுமே தவறான முழக்கங்கள், என்று நிராகிப்பதற்கு பதில் ஒரு தலைப் பட்சமான முடிவெடுத்து பாகிஸ்தானின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்த அதே சமயம், ''திராவிட நாடு'' கோரிக்கைக்கு மாகாண சுயாட்சி தீர்மானத்தை முன் வைத்தார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள்.

அடக்கி ஒடுக்கப்படும் எல்லா தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும் அங்கீகரித்து ஆதரிக்கத் தவறினர். அது மட்டுமல்ல விழிப்புணர்வு பெற்று தேசிய இனங்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காக போராடிய போதெல்லாம்,'' அந்நிய ஏகாதிபத்திய சதி,'' ''பிளவு வாதம், பிரிவான வாதம், பிராந்திய வாதம்'' என்று முத்திரை குத்தி 'அகில இந்திய தேசிய' த்துடன் சேர்த்து கொண்டு மூர்க்கமாக எதிர்க்கிறார்கள்.

மார்க்சிய லெனினியக் கட்சி தோன்றி போராடிக் கொண்டிருக்கும் காஷ்மீர், நாகா, மிசோ போன்ற தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை அங்கீகரித்து, ஆதரிக்கத் தொடங்கியதும் போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள், குறிப்பாக, ''மார்க்சிய கம்யூனிஸ்ட்'' கட்சி அவற்றை கடுமையாக எதிர்க்கத் துவங்கின. 1969 மதுரை மாநாட்டில் தேசிய இனப் போராட்டங்களுக்கு எதிராக 'அகில இந்திய தேசியத்தை முற்றாக வலியுறுத்தி பல சேர்க்கைகளை தனது திட்டத்தில் இணைத்துக் கொண்டது, ''மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி.''

வரலாறு பூர்வமாக சமூக ஆதிக்கம் வகித்த வந்த பார்ப்பண சாதியினர் காங்கிரசின் மூலம் அரசியல் ஆதிக்கமும் வகிக்கிறார்கள். சாதிய ஒடுக்கு முறையின் அடிப்படையாக வர்ணாசிரம தர்மமும், அதன் கர்த்தாக்களாக பார்ப்பனர்களும் விளங்குவதாக ஒடுக்கப்பட்ட சாதியினர் கருதுகிறார்கள். வரலாறு பூர்வமான இந்த உண்மையை ஏற்று பார்ப்பணீயத்துக்கு எதிராகப் போராடுவதற்குப் பதில் அப்படிப்பட்டதொரு ஆதிக்கமே கிடையாது; பார்ப்பணர்களுக்கெதிராக திராவிட இயக்கங்கள் ஏற்படுத்திய வெறும் மாயைதான் இதுவென்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் சாதிக்கின்றனர். ஒடுக்கப்பட்ட சாதியினர் வெறுக்கும் வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையான வேதங்களை ஏற்றிப் போற்றியும், இராமாயணம், மகாபாரதத்தை மக்கள் இலக்கியம் என்று மெச்சியும் வருகின்றனர், போலிக் கம்யூனிஸ்டுகள்.

ஒடுக்கப்படும் தேசிய இன உணர்வை ஆதாரமாகக் கொண்டு கொச்சையான முறையில் எழுப்பப்பட்ட ''திராவிட நாடு'' கோரிக்கையை

> ஒடுக்கப்படும் தேசிய இன உணர்வை ஆதாரமாகக் கொண்டு கொச்சையான முறையில் எழுப்பப்பட்ட "திராவிட நாடு" கோரிக்கையை நிராகரிக்கும் அதே சமயம் தமிழ் தேசிய இனம் உட்பட எல்லா தேசிய இனங்களுக்குமான சுய நிர்ணய உரிமை கோரிக்கையை அங்கீகரித்து ஆதரிப்பது தான் உண்மையான கம்யூனிஸ்டுகளின் கடமை. அப்படிச் செய்திருந்தால் இன்றைய பிழைப்புவாத திராவிடக் கட்சிகளை வளர விடாமல் கம்யூனிச இயக்கம் தமிழகத்தில் வலுவாக வேரூன்றி இருக்க முடியும். அதற்கு மாறாக திராவிடக் கட்சிகளிடம் மாறிமாறி சீட்டுப்பிச்சை எடுக்கும் நிலைக்குப் போலிக் கம்யூனிஸ்டுகள் இழிந்து போனார்கள். ஆனால் இதற்கும் கூட பரிகசிக்கத்தக்க விளக்கம் கொடுக்கிறார் ராமமூர்த்தி.



படிப்பகம்

www.padippakam.com

## சாதி மத அவமானச் சின்னத்தை அழிப்போம்!

அன்பார்ந்த 'புதிய ஜனநாயகம்' வாசகர்களே,

நமது நாட்டின் மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவது சாதி முறையாகும். நம்து நாட்டின் சமூக ரீதியிலான பெரியதொரு அவமானச் சின்னம் சாதி முறையாகும். அதன் அடிப்படையான வர்ணா சிரம தர்மத்தை உருவாக்கி உயர்த்திப் பிடிப்பது இந்து மதமாகும்.

தன்னோடும், தனது குடும்பத்தோடும் சாதிப் பெயரை ஒட்டிக்கொள்வதன் மூலம் தான் ஒரு ''மேல் சாதிகாரன்'' என்கிற சமூகத் தகுதியும், கௌரவமும், செல்வாக்கும் கிடைக்கும் என்று யாராவது கருதினால் அது வக்கிரமானது; வெறுக்கத்தக்கது; இழிகுணமுடையது ஆகும். அடுத்தவனை அடக்கி ஒடுக்கிய, அடுத்தவன் உழைப்பைச் சுரண்டிய பாரம்பரியம் எனக்கிருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் என்ன பெருமை இருக்க முடியும்?

தன்னோடும், தன்து குடும்பத்தோடும் சாதிப்பெயரை ஒட்டிக்கொள்வதன் மூலம் தான் ஒரு ஒடுக்கப்பட்ட சாதிக்காரன் என்பதைக் காட்டி அரசாங்க சலுகைகள் பெறுவதன் மூலம் முன்னேறி விட முடியும் என்று யாராவது முயன்றால், அதன் மூலம் சாதி முறையையே ஒழித்து விட முடியும் என்று யாராவது நம்பினால் அது வெறும் பகற்கனவாகும். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களில் ஏதோ ஒரு சிலருக்கு சில சலுகைகளைக் கொடுப்பதன் மூலம் பெரும்பான்மையான மக்களை ஏய்க்கவும், சாதி முறையைப் பதிவு செய்து அதிகாரபூர்வமாகக் கட்டிக் காக்கவும் செய்யும் இந்த அரசின் இழிசெயலுக்கு உடந்தையாக இருப்பதாகும். சாதிமுறை நீடிப்பதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை, எனக்கு ஏதோ சலுகைகள் கிடைத்தால் போதும் என்று கூறுவது எப்படி சுயமரியாதையுடைய செயலாகும்?

எனவே நம்மோடும், நமது குடும்பத்தோடு சாதி என்கிற அவமானச் சின்னமும், அதற்கு அடிப்படையான வர்ணா சிரம தர்மத்தை உருவாக்கி உயர்த்திப்பிடிக்கும் இந்து மதமும் ஒட்டிக் கொள்ளாதிருப்பதற்குத் தொடர்ந்து போராடுவோம். குறிப்பாக, ஒவ்வொரு கல்வியாண்டிலும் பள்ளிகளில் நமது குழந்தைகளைச் சேர்க்கும்போது சாதி, மதப் பெயர்களைக் கேட்டு பதிவு செய்து கொள்கிறார்கள். சாதி, மதப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள மறுப்பதற்கு நமக்கு சட்டப்படி உரிமை உண்டு. பள்ளியில் தமது குழந்தைகளைச் சேர்க்கும் புதிய ஜனநாயகம் வாசகர்களுக்கு சாதி, மதப் பெயரைப் பதிவு செய்வதை மறுத்து விடும்படி நாம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். சட்டப்படி நமக்கு அந்த உரிமை இல்லையென்று கூறி பல பள்ளிகளில் மறுத்துவிடுகின்றனர்: அந்த உரிமையை நிலை நாட்டுவதற்கான நமது போராட்டமே சாதி முறைக்கு எதிரான துவக்கமாக இருக்கட்டும் என்று அறை கூவல் விடுகிறோம்.

ஒரு மகத்தான புரட்சி வெள்ளம் தான் இந்த நாட்டின் அவமானச் சின்னமான சாதி, மத இழிவுகளைத் துடைத்து அழிக்க முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். திரண்டு வரும் அந்தப் பெருவெள்ளத்தில் சேரும் சிறு துளியாக இந்தப் போராட்டம் இருக்கட்டும். உங்கள் அனுபவத்தை எங்களுக்கு எழுதுங்கள். அவசியமானதைப் பிரசுரிக்கிறோம்.

ஆசிரியர் குழு. புதிய ஜனநாயகம்.

---

நிராகரிக்கும் அதே சமயம் தமிழ் தேசிய இனம் உட்பட எல்லா தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை அங்கீகரித்து ஆதரிப்பதுதான் உண்மையான கம்யூனிஸ்டுகளின் கடமை. அப்படிச் செய்திருந்தால் இன்றைய பிழைப்பு வாத திராவிட கட்சிகளை வளரவிடாமல் கம்யூனிச இயக்கம் தமிழகத்தில் வலுவாக வேறூன்றியிருக்க முடியும்.

அதற்கு மாறாக திராவிடக் கட்சிகளிடம் மாறி மாறி சீட்டுப் பிச்சை எடுக்கும் நிலைக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் இழிந்து போனார்கள். இதற்கும் கூட ஒரு சித்தாந்த விளக்கம் கொடுக்கிறார் ராமமூர்த்தி. ''தமிழ் நாட்டு முதலாளிகளின் நலன்களைக் காக்கும் கட்சியாக இருந்த போதிலும் ஏகபோக முதலாளிகளுக்கும் ஏனைய பிராந்திய நடுத்தர சிறு முதலாளிகளுக்கும் இடையே தோன்றும் மோதல்கள், முரண்பாடுகள் ஆகியவற்றை கம்யூனிஸ்டு இயக்கம் பயன்படுத்துவது இன்றியமையாத நடைமுறை.

''கடைசியாக, மத்திய சர்க்காரின் அடிப்படையான கொள்கைகளுக்கெதிராக, ஆனால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவதை, நாட்டில் வறுமையும் வேலை இல்லாத் திண்டாட்டமும் வளர்வதை ஒருபுறம் ஏகபோக முதலாளிகளும் அயல்நாட்டு முதலாளிகளும் ஒடுக்குவதையும் பாமர மக்களின் நிலை கீழே போவதையும் உணர்ந்து இந்த மக்கள் விரோதமான கொள்கைக்கு எதிராக நாடெங்கும் உணர்வு வளர்ந்து வளர்கிறது. திராவிட இயக்கத்தினரிடமும் இந்த உணர்வு பரவாமலிருக்க முடியாது. அந்த இயக்கத்தின் கட்சிகளும், இந்த அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக மக்களுக்கு நலன் பயக்கும், மக்களுக்கு சாதகமான வளர்ச்சிக்கான பாதையில் முன்னேற உண்மையான ஜனநாயகப் பாதையில் நாடு முன்னேறும் திட்டத்தின் அடிப்படையில் ஏனைய இடதுசாரி, ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து நிற்க வேண்டும்என்பதே''மார்க்சிஸ்டு'' கம்யூனிஸ்ட்டு'' கட்சியின் விருப்பம்'' என்று எழுதி தனது நூலை முடிக்கிறார் ராமமூர்த்தி.

முதலாளிகளுக்கிடையிலான முரண்பாடுகளைப் பயன்படுத்துவது, ஜனநாயகப் பாதைக்கு இழுப்பது என்றெல்லாம் சித்தாந்த சாயம் பூசி திராவிடக் கட்சிகளுடன் சீட்டுப் பிச்சைக்காக சந்தர்ப்பவாத கூட்டு சேர்வதை நியாயப்படுத்துகிறார் ராமமூர்த்தி. அரசியல் பிழைப்புவாதிகளுடன் தொழிற்சங்க பிழைப்புவாதிகள் கூட்டுச் சேர்வதற்கான பித்தலாட்டம் தானே தவிர இதில் ஒரு சித்தாந்தமும் கிடையாது, வெங்காயமும் கிடையாது.

1952-ல் தமிழகத்தின் எதிர்க்கட்சியாய் இருந்த போலிக் கம்யூனிஸ்ட்டு கட்சி படிப்படியாய் தேய்ந்து போய் தனித்துப் போட்டியிட்டால் எந்தத் தொகுதியிலும் வெற்றிபெற முடியாது என்கிற நிலை உருவானது. 1967 தேர்தலில் தி.மு.க. வின் தயவில் சில இடங்களைக் கைப்பற்றி இருந்தாலும் 1971 தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட போது எல்லாத் தொகுதிகளிலும் மண்ணைக் கவ்வியபோது இந்த உண்மை தெரிந்து விட்டது. அதன் பிறகு, எம். ஜி.ஆர். கருணாநிதி கட்சிகளுடன் மாறி மாறி சந்தர்ப்பவாதக் கூட்டுகளுக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் அலைவதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். எந்தக் கட்சியுடன் சேர்கிறார்களோ அதை ஜனநாயக முற்போக்கு அணியென்று கூறி ஒட்டுப் பொறுக்குவதும், அது ஆட்சிக்கு வந்த பிறகு ஜனநாயக விரோத, மக்கள் விரோத அரசு என்று கூறி போராடுவதும், மீண்டும் தொழிலாளர்களுக்கு துரோகமிழைத்து அடுத்த தேர்தல்களுக்கு அலைவதும் நாடறிந்த இரகசியமாகும்.

காங்கிரசை வீழ்த்தும் தந்திரோபாய அடிப்படையிலானது தான் தமது தேர்தல் கூட்டுகள் என்று ராமமூர்த்தி கூறிக் கொள்கிறார். ஆனால் காங்கிரசுடன் திராவிடக் கட்சிகள் நடத்தும் பேரங்கள் தோற்றுப் போகும் போதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு சில எலும்புத் துண்டுகளை வீசி அவை சேர்த்துக் கொள்கின்றன. இந்தப் பிழைப்பு வாதத் தேர்தல் கட்சிகள் எல்லாவற்றிற்கும் ''அரசியல் மாமா'' வேலை பார்த்ததைத் தான் பல இடங்களில் எழுதி பெருமையடித்துக் கொள்கிறார் ராமமூர்த்தி.

(தொடரும்)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா


சென்னையில் இருக்கும் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலமே சாலையோர சுவர்கள்தான். சினிமா போஸ்டர்களை அவை ருசித்து சாப்பிடுவதை பார்த்தாலே, பரிதாபமாக இருக்கும் என்ன செய்வது? கல்யாண வீடுகளில் விழும் இலைகளுக்குகூட ஏழைமக்கள் தங்களோடு போட்டியிடுவதை கண்டு வெறுத்துபோன நகர்புறத்து மாடுகள் தங்கள் உணவு வகையையே மாற்றிக் கொண்டன.

ஆனால் இதோ, இங்கு இருக்கும் மாடுகள் மேய்வது எதை தெரியுமா? உருளைக்கிழங்குகளை! ஆமாம், நடுத்தர வர்க்கத்திற்கே கையைக் கடிக்கும் விலையாகத் தெரியும் காய்வகையான உருளைக் கிழங்குகளைத்தான் இம்மாடுகள் மேய்ந்துக் கொண்டிருக்கின்றன. உத்திரபிரதேச மாநில கான்பூர் நகர மாடுகளுக்குத்தான் இந்த அதிர்ஷ்டம்! அம்மாநில விவசாயிகள் தங்கள் ரத்தத்தைக் கொட்டி விளைவித்த உருளைக்கிழங்குகள்தான் கிடங்கு வசதியின்றி வெட்ட வெளியில் இப்படி மூடையாக குவிக்கப்பட்டு அழுகிக் கொண்டிருக்கிறது.

காரணம்; விளைவித்த உருளைக் கிழங்குகளை சேமித்து வைத்துவிற்க தேவையான குளிரூட்டப்பட்ட கிடங்கு வசதிகள் இல்லை. விளைவு; இவ்வாண்டு உற்பத்தியான 70 லட்சம் டன் உருளைக்கிழங்குகளில் 47.25 லட்சம் டன்கள், அழுகி நாற்றமடித்து விவசாயிகளுக்கு வேண்டாத சுமையாகிவிட்டது. அதை விளைவிக்க பயிர்கடன் வாங்கிய 25 லட்சம் விவசாயிகள் இப்போது மீளமுடியாத கடனில் மூழ்கி செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

100 கிலோ எடை கொண்ட உருளைக்கிழங்கு மூடை ரூபாய் முப்பதுக்கு வாங்குவதற்கு ஆளில்லை. இதற்காக விவசாயி சராசரியாக 100 கிலோ மூடைக்கு போக்குவரத்துக்காக மட்டும் 11 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. குளிரூட்டப்பட்ட கிடங்கு வசதிக்கு சிலநாள் வாடகையோ ரூபாய 24. மாநிலத்தில் உள்ள 770 குளிரூட்டப்பட்ட கிடங்குகளில் பெரும்பாலானவை தனியார் வியாபாரிகளுக்கு சொந்தமானவை. அரசாங்கமோ, நிதி இல்லையென பொதுக் கிடங்குகளைக் கட்ட மறுக்கிறது.

இதோ, இது ஒரு அதிநவீன கருவி ஒரு மனிதன் உடல் எடையில் உள்ள சத்துக்களில், என்னென்ன சத்துக்கள், எந்தெந்த எடையில், விகிதத்தில் உள்ளது என்பதை நொடியில் கண்டறியும். ஹைதராபாத் - தேசீய சத்துணவு கழகத்தில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கருவியால் மனிதனின் உடம்பில் உள்ள சத்துணவு குறைவுகள், கர்ப்பிணிப்பெண்களுக்கு குடற்பாற் குழாய் செயல் படும்விதம், ஊனம சிதைவு மாறுபாடு, குரல்வளை சுரப்பி வீக்க கோளாது, இவைகளை தொடக்கத்திலேயே நொடியில் கண்டு பிடித்து, தேவையான ஊட்டச் சத்து உணவுகளை உட்கொண்டு நோய்வராமல் தடுத்து விடமுடியும். தொழிலாளர்கள், விளையாட்டு வீரர்கள், ராணுவத்தினர் என பலதரப்பட்ட உழைப்பாளர்களுக்கு தொழிலுக்குத் தேவையான சக்தி இருக்கிறதா என்பதை தொடர்ச்சியாக துல்லியமாக கண்டறியலாம். இதன் மூலம் தரமானவர்களை தேர்ந்தெடுக்கலாம், கிழித்துக் கட்டலாம். அந்த வசதியும் இதில் அடக்கம் என பெருமை கொள்கிறார்கள் அதிகாரவர்க்த்தினர். அனைத்தும் உண்மைதான்! ஆனால் இது, குழந்தை பாலுக்கு அழும்போது லிங்கத்திற்கு பஞ்சாமிர்தம் கொடுத்த கதையாக அல்லவா இருக்கிறது?



பெரும்பாலான உழைக்கும் மக்களுக்கு கால்வயிறு கஞ்சிக்குக்குக் கூட உத்திரவாதம் தர முடியாதவர்கள்தான், ஒவ்வொரு குடிமகனுக்கும் சத்துணவு எந்த விகிதத்தில் குறைகிறது என கண்டுபிடித்து தேவையான ஊட்டச்சத்துக் கொடுத்து நோய் நொடியிலிருந்து காப்பற்றப் போகிறார்களாம்! அதற்குதான் இக்கருவியை வாங்கியிருக்கிறார்களாம். வேடிக்கை என்னவென்றால், இக்கருவியை பாதுகாப்பாக வைப்பதற்கான அறை தயாரிப்புச் செலவுமட்டும் 14 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறதாம்! அதன் விலையைப் பற்றி மூச்சு விடவில்லை.

விளைந்த உருளைகிழங்குகளை சேமித்து வைக்க, சில லட்சங்கள் போட்டு நிரந்தரமாக கிடங்கு வசதி செய்துதர யோக்கியதை இல்லை. குறைந்த பட்சம் வீணாகும் உருளைக் கிழங்குகளை அரசே கொள்முதல் செய்து அதை குறைந்த விலைக்கு மக்களுக்கு விற்று சந்தையை உருவாக்கினால் உணவாகவும் பயன்படும்; விவசாயிகளின் பிரச்சினையும் தீரும். இதற்கு வகை செய்ய வக்கற்ற ஆட்சியாளர் கூட்டம் மக்களுக்கு ஊட்டச்சத்து குறைவது பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

மக்களின் நலனில் அறவே அக்கறையற்று மக்களின் ரத்தத்தில் உருவான வரிப்பணத்தை வீண் ஜம்பத்திற்கு விரயமாக்கும் வீணர்கள் கூட்டத்தை விரட்டியடிப்பது எப்போது?





படிப்பகம்